உ

சிவமயம்.

ஸ்ரீவடிவாம்பாள் துணை.

# உருக்மாங்கதநாடகம்.

இஃது

திரிசிரபுரம் - நாகப்பிள்ளை குமாரரும்

பெங்களூர்

ஆதி ஹிந்து விநோதசபையின் ஸ்டேஜ்மானேஜர்

மு - சுப்பராய ஆசாரி அவர்கள்

மாணாக்கரி லொருவருமாகிய

**நாராயணசாமிபிள்ளை**

அவர்களால் இயற்றப்பட்டு

ம-ா-ா-ஸ்ரீ

அருணானந்தசுவாமிகள் மாணாக்கர்

ம - ா - ா - ஸ்ரீ

ஏலகை - சிவசண்முகப்பிள்ளை அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

மதராஸ் ஹிந்துராயல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1895

*Registered Copy Right.*

இதன் விலை அணா 4

உ

சிவமயம்.

ஸ்ரீவடிவாம்பாள் துணை.

# உருக்மாங்கதநாடகம்.

இஃது

திரிசிரபுரம் • நாகப்பிள்ளை குமாரரும்

பெங்களூர்

ஆதி நவீந்து விநோதசபையின் ஸ்டேஜ்மானேஜர்

மு - சுப்பராய ஆசாரி அவர்கள்

மாணாக்கரி லொருவருமாகிய

**நாராயணசாமிப்பிள்ளை**

அவர்களால் இயற்றப்பட்டு

ம-ா-ா-ஸ்ரீ

அருணாசலசுவாமிகள் மாணாக்கர்

ம-ா-ா-ஸ்ரீ

ஏகை - சிவசண்முகப்பிள்ளை அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

மதராஸ் ஹிந்துராயல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1895

*Registered Copy Right.*

இதன் விலை அணா 4

உ.

சிவமயம்.

ஸ்ரீவடிவாம்பாள் துணை.

# சாற்றுகவி

இஃது

அருளானந்தசுவாமிகள் மாணாக்கர்

ம-ள-ள-ஸ்ரீ ஏகை - சிவசண்முகப்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆராப்பனிமொ னுயர் பதியை வியனேகா தசிவிரதத்
    தன்புற்றஞ்ஞான்
றிராப்பனிகொளா தருட்டித்தடைந்த ருக்மாங்கதன்கதையை
    யிங்குவர்ப்புத்
தாரப்பனிதத் தீம்பாகோ தண்ணமுதமென பலருந்
    தருக்கவேமுச்
சிராப்பனி நாராயணசாமிக் குரிசில் நாடகமாய்
    தெரித்தானம்மா.

இஃது

அஷ்டாவதானம்

ம-ள-ள-ஸ்ரீ பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீராய புகழுருக்கு மாங்கதசற் சரிதநயச் சிறப்பின்கோர்ந்து
பாராய நாடகங்கற் பவனையொடலங் காரரசப் பண்புசேர
காராய வெழிற்றுடவைச் சிரபுரத்து நாகப்பன் கான்முளைப்பேர்
நாராய ணச்சாமி நாவலவன்பா வலர்மெச்ச நல்கினனல்.

இஃது
சென்னை பெரியமேட்டு
ம-௱-௱-ஸ்ரீ சின்ன முருகப்பசெட்டியாரால் இயற்றியது.

இகமீதிற்சிரபுரஞ்செய்மலநாகப்பன்
செய்தருணுடலத்தாற்
சசெயனவுதித்தநாராயணச்செல்வனுஞ்
செந்தமிழ்க்கவியில்வல்லோன்
பாரிலருசங்கீதசாயித்தியபண்டிறை
பாவாணர்கொண்டாடவே
பகருமிவ்வுலகில்கனவான்கள் தனவான்களால்
பரிசளவிலாதுபெற்றோன்
நாரிலுருக்குமாங்கதன்சரிதைநாடகஞ்
சாற்றினன்தமிழினாலே
சகலரும்யேகாதசிப்பெருமைமாதென்று
தானறிந்தார்களம்மா
ஏரிலருமிவன்கவிதைனன்னென்றுசொல்லுவேன்
இனியதேனோசீனியோ
என்றவொருநாவினாற்சொல்லதரமல்லவிவை
எவரினுமரிது அரிதே.

இஃது
மதராஸ் பியாபிஸ் டிராமிக் ஒவர்சீயராகிய
வித்வான் மோரூர் - முனிசாமிமுதலியாரவர்களாலியற்றிய
நேரிசை வெண்பா.

சீராரு நாரா யணசாமி செம்மற்றன்
பேராரு நாடகமாய்ப் பேசினன்—கூராருக்
மாங்கதனர் நற்சரித மாயவனின் வைகுந்தந்
தாங்கித் தனையமர்த்தத்தான்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருவளருஞ் சிரபுரமாம் பதிவளரும் நாகப்பன்
செய்த பேற்றால்
உருவளருஞ் சீர்நாரா யணசாமி யெனும்புலவ
னன்று வந்து



கருவளரும் பிணியொழிய கற்றோர்கள்செவிக்கினிய
கருத்தமைத்து
மருவளரு முருக்குமாங் கதன்சரிதை நாடகமாய்
வகுத்தான மாதோ.

இஃது
வாலாஜாபேட்டை வித்வான் இராமாநுஜநாயகரவர்கள்
மாணாக்கருளொருவரான
கோமளீஸ்வரன்பேட்டை கோ. வடிவேலு செட்டியாரவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீர்தவழுஞ் சோலைசூழ் சிரபுரமென் னகரிலுள
கவிவ லோர்க்குள்
ஏர்வளர்நா கப்பன் செய் தவத்தினால் வந்துதித்தோ
னிருக்கிற் கூறு
நார்பெருகு நாரணனைத் துதிநாரா யணசாமி
நவர சந்தான்
சீர்நாட கமாக வுருக்குமாங் கதசரிதஞ்
சாற்றி னான்.

இஃது
மதராஸ் பியாபிஸ் டிராமிக் ஓவர்சீயராகிய
வித்வான் மோரூர் - முனிசாமிமுதலியாரவர்கள் மாணாக்கரும்
பெரியமேட்டு சின்ன முருகப்பசெட்டியார்குமாரருமாகிய
சிவத்தியானசெட்டியாரவர்களாலியற்றிய
ஆறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வழுத்துதிரி சிரபுரத்து நாகப்பன் பன்னுணர்ப்
வருந்தி னோற்ற
முழுத்தவத்தால் வருநாரா யணசாமி யெனும்பெயரான்
முதிர்ந்த வன்பின்
விழுப்பமார் தருந்தமிழா லுருக்குமாங் கதன்சரிதை
விந்தங் குன்ற
அழுத்தியகற் குறுமுனிபு மதிசிக்க நாடகமா
யறைந்தான் மன்னோ.

சிவமயம்.
ஸ்ரீவடிவழம்பாள் துணை.

# உருக்மாங்கத நாடகம்.

நேரிசைவெண்பா.

அச்சுதன் பொற்சேவடியை யன்புடனே பூசிக்கும்
உச்சிதருக் மாங்கதன்றன் நுண்கதையை—இச்சகத்திற்
றுங்கமிகு நாடகமாய்ச் சொல்லவருண் மேவுசிவ
கங்கைபெற்றோன் செங்கழலே காப்பு.

விநாயகர் துதி.

தரு - இ-ம் ஆனந்தபைரவி - தா - ஆதி.

உமாபதி தநயனே வரமருள்வாய் கஜமாமுகனே   உமாபதி.

அனுபல்லவி.

குமாரசோதரா குணாலயமே க்ருபாகரா
குவலய ஜீவாதாரா   உமாபதி.

சரணங்கள்.

நாதாநவினபாதா   நலமேதாதா
யெனவே யுனதடி   தொழுதேனநீதா
வேதவிநோதா   வல்லபைச
மேதாபராமுகமாகா   தருள்நீதா   உமாபதி.

நேசா அன்பருள்வாசா நெறிசர்வேசா
யெனதுகவலையகற்றுஞ்   ஜெகதீசா
ஈசாவிலாசா   யேழையர்ப்
பாசாகடைக்கண்ணூற்பாரும்பவநாசா   உமாபதி.

சுராதி முனிவராதி   புகழ்பார
பரனே மாகதவல்லபி   சுபுத்திர
அரமலர்க்கரா   அபயஹஸ்தந்
தாரா நாராயணசாமிக்   குபகாரா   உமாபதி



உருக்மாங்கதன் வருகிற தரு.

இ-ம். தோடி - தாளம் - ஆதி.

அகிலமனைத்தும்புகழ்   அரசன்ருக்மாங்கத
அரசன்கொலுவில் வந்தானே   ருக்மாங்கத
அரசன்கொலுவில் வந்தானே   அகிலமனைத்தும்.

அநுபல்லவி.

இகலிலாதரசரும் பணிய சுகுணமாரன்
இருடியர்தமக்கென்றும் இரங்கும் உதாரதீரன்
எருலாவுபராக்கட்டுறுமில் கொடியவன்
இருபதந்தனைநாளும் போற்றுநல்லடியவன்
போரிலாருமிவன் சூரனெனவேபன்ன
புகழுஞ்சந்த்ரகுல புரந்தரனேயென்ன   அகிலமனைத்தும்

சரணம்.

பச்சைமுத்தாரத்தினமுடி சிரசிற்றுலங்க
பரிதியொளிபோற்குழை யிருசெவியிலிலங்க
உச்சித நாசிதிலகந்தரிலதமின்ன
வொப்பிலாகரத்தினிற் செங்கோல்பளபளென்ன

ஓதருமறையவர் முறையுடனிகள்கூற   திண்ணியரான
சோதில்மன்னரிடைவிடாதுசுற்றிலுஞ்சேர   குடிசனங்களும்
ஆதரவிவனெனவே பலரும்வந்துசார   அவனிமீதில்
ஏதொருபகையரணுகிடாது திறமீற   இருபுறத்தில்

எழில்மிகுமந்திரிமார்கள்நாட
அழகுறுஞ்சிறுமாதராட
எச்சரித்துநட்டியங்களோதிட
அச்சமின்றிவாத்தியங்களூதிட
இணையொருவருமிலையெனகவிபடிக்க
பணைபொருபுகலரும் வெண்குடைபிடிக்க
இத்தலமீதினில் சித்தசனுமென
மெத்தவியந்து ப்ரசித்த பூமானென
இடரிலாதமனமுதலுமுணர்ந்த
நடைபெறுந்தருபனைகளுணர்ந்த   அகிலமனைத்தும்.

ருக்மாங்கதன் போற்றி விருத்தம்.

மதிகுலம் விளங்கவென்றும் மானிலத்தரசர்வாழ்க
துதிமனுநீதிவாழ்க துகளிலாமறையோர்வாழ்க
நிதியுடன் குடிகள்வாழ்க நிகரிலாமாரிபெய்தென்
பதியினிற்செங்கோலோங்கப் பரமனேயருள்வாய்போற்றி.

முதல் மந்திரி விருத்தம்.

இதமுடன் குடிகள்தம்மை யிடரின்றிக்காக்குநான்கு
விதந்தன்னில் கீர்த்திபெற்ற விதரணவரசேமாயோன்
பதந்தனைநாளும் வாழ்த்தும் பகருமணியேருக்மாங்
கதமகாராஜனேநின் கழல்சதாபோற்றி போற்றி.

இரண்டாவது மந்திரி விருத்தம்.

அன்றுமூவடியால்மண்ணை அளந்திட்டநெடியோன்றன்னை
நன்றுடன்துதித்துச்செங்கோல் நடாத்திடுமெகிபாலனே,
குன்றெனக்குடிகள்நாளுங் கூறவேபுகழ்பெற்றோங்கும்
வென்றிசேர் ருக்மாங்கத வீரனே நின்றாள்போற்றி.

தேசவிசாரணை.

அரசன் வினா.

நாடது செழித்திடத் திங்கண்மும்மாரிகள்
நலமதாய் பெய்து வருதா.

முதல் மந்திரி விடை.

நராதிபா குறைவின்றிதிங்களில் மும்மாரி
நம்பதியில் பெய்து வருதே.

அரசன் வினா.

சீரிலகு ஆலயப்பூஜை ஷட்காலமும்
சிறப்புடன் நடந்தேறுதா.

இரண்டாவது மந்திரி விடை.

செந்திருவருள்வாய்ந்த செம்மலேபூஜைகள்
செழிப்பாய் நடந்தேறுதே.



அரசன் வினா.

விதிமுறைப்பிறழாமல் அந்தணர்கள் வேள்வியதை
வெறுப்பின்றிசெய்கிறாரா.

முதல் மந்திரி விடை.

வித்தகாவிப்பிரர்கள் வேள்வியதைக் கிரமமாய்
மேதினில் செய்கிறாரே.

அரசன் வினா.

பத்தியாய்மன்னவர்கள் கட்டிடுங் கப்பமதைப்
பணிவுடன் கட்டுறாரா.

இரண்டாவது மந்திரி விடை.

பார்த்திபா வரசர்கள் முறைப்படிப் பகுதியதை
பயந்துமே கட்டுறாரே.

அரசன் விருத்தம்.

நன்னெறிபுகலுமெந்தன் னல்லமச்சர்களேகேண்மின்
பன்னருஞ்சோலைதன்னில் படர்ந்ததோர்மலரையெல்லாம்
இன்னலில்லாமல்விண்டுக் கிதமுடன்பூசைசெய்ய
பின்னமில்லாமல்கொய்து பிரியமாய்வருகிறாரா.

வசனம்.

நல்ல அறிவைப்புகட்டும் விவேகத்தில் சிறந்த மந்திரிகாள் சொல்வதற்கு அரிதான நமது உத்தியானவனத்தில் மலரும் புட்பங்களை ஸ்ரீபரந்தாமனுடைய திரு ஆராதனைக்காக யாதொரு பின்னமின்றிப் பரித்துக்கொண்டுபோய் காலந்தவராமல் அர்ச்சித்துவருகிறார்களா.

மந்திரிகள் வசனம்.

மஹாராஜனே! தமதுஆக்கினைப்பிரகாரமே சிலமலர்கள் நமது நகரத்திலுள்ள ஆலயங்களுக்கும் சில மலர்கள் அந்தபுரத்தில் ஆராதிக்கும் அர்ச்சினைகளுக்காகப் பரித்து காலந் தவறாமல் காரியத்தை நடாத்திக்கொண்டுவருகிறார்கள். அப்படியேதேனுங் குறைவாகும்விஷயத்தில் பணிச்சாரர்கள் முறையமிடுவாரரசே.

அரசன் வசனம்.

மந்திரிமார்களே ! கொலுவைகலேயச்செய் அவரவர்விடுதிக்கேகுங்கள். நான் அந்தப்புரம் போய்வருகிறேன்.

சந்தியாவளி புட்பங் குறைவதற்கு காரணந் தோழியைக்கேட்டு தண்டித்தல்.

விருத்தம்.

அருமையாயேவல்செய்யு மதிருபசகியேகேளாய்
திருவாராதனைக்குகந்த திவ்யமாமலர்களியாவும்
பெருமையாய்க்கொணருநீதான் பேதப்பட்டனேகநாளாய்
வருவதாலெனக்குநீதான் வராற்றையுரைசெய்வாயே.

வசனம்.

என்னிடத்தில் அதிபத்திவிசுவாசத்துடன் தொழில்செய்துக்கொண்டுவரும் சகி நான் பூசிக்கும் கடவுள் திருவாராதனைக்காக யேற்படுத்திய நமது உத்தியானவனத்திலுள்ள பலஜாதிபுட்பங்களை நீ பரித்துக்கொண்டு வருகிற வழக்கமல்லவோ.

தோழி வசனம்.

ஆம் அம்மணி.

சந்தியாவளி வசனம்.

அப்படியிருக்க என்னடி நாளுக்குநாள் மலர்கள் குறைவுபட்டுக்கொண்டே வருகிறது காரணமென்ன சீக்கிரம் வெளிபடுத்துவாய்.

தோழி வசனம்.

கருணையங் கடலாயோங்குந்தாயே நான் பிரதிநாளும் புட்பம்பரிக்க நந்தவனத்தில்பிரவேசித்து வொவ்வொருஜாதிமலர்களைநோக்குமிடத்தில் அவைகளெல்லா மறுப்பட்டு செடிகளில் நல்ல மலரில்லாமலிருக்கிறது. அவைகளைப்பரிப்பவரின்னாரென்றுஎனக்குத்தெரியவாராதம்மணி. வனக்காவலனால் இந்தகாரணத்தை அறிந்துக்கொள்ளவேண்டுமன்றி மற்றவரால் அறியக்கூடாதுதாயே.



சந்தியாவளி வசனம்.

அடிசண்டாளி ! சுவாமிகாரியத்தில் துரோகஞ்செய்த சதிகாரி ! உன்னால் இந்த சூதுகள் நடக்கிறதே தவிர மற்றவரால் நடக்கிறதல்ல ? தெரிந்துக்கொண்டேன், நல்லது ? அடா சேவகா! இந்தபாவியானவன் ஆராதனைக்காகும் புட்பங்களை வஞ்சித்தமையால் இவளை சிறைச்சாலையில் அடைப்பாய.

தோழிபுலம்பல் தரு.

இ-ம். செஞ்சுருட்டி தா - ஆதி.

என்னசெய்வேன் யென்விதிவசமோயிது
ஆஹா ஹா தேவா என்விதிவசமோயிது

அன்னவாகனமீதேறு மயன்செயலோதவமோ
அன்றிமுன்செய்தபவமோ - அறிகிலேனே
ஆவிசோருதென்செய்குவேன். ஆ ஹா ஹா தேவா.

பன்னருநந்தவனத்தில் படருமலர்தனை
பாவியெவரோகொய்தனை - பக்தவத்சலா
பழிக்காளாகவே விதித்தார். ஆ ஹா ஹா தேவா.

ஏதொன்றுமறியாதிந்த யேழையின்மீது
யியம்பினள்பெருங்கோது - இதற்குநான்
யெவரைநோகுவேன் தெய்வமே. ஆ ஹா ஹா தேவா.

பொது வசனம்.

சந்தியாவளி அரசனுக்கு புட்பங்கள்நாளுக்குநாள்குறைவுறுகிறதென்று சொல்லி காவலனை விசாரிக்கும்படிதெரிவித்தல்.

சந்தியாவளி விருத்தம்.

மண்டலாதிபனேயெந்தன் மணாளனேவிலக்கேள்ச
எண்டிசைபுகழுற்றோங்கு மென்துபூசைவிதுன்ன
வண்டமர்புட்பந்தாநும் வரவரக்குறைவதாலே
விண்டிடவேண்டுமந்த விதமதையறிவதற்கே.

வசனம்.

நீதிவழுவாமல் உலகத்தைப் பரிபாலனஞ்செய்யும் எனது துரையே பூமண்டலங்களிற் சிறப்புற்றோங்கிய நமது சிங்காரபூந்தோட்டத்தில் புட்பிக்கும் அனேகவித மலர்களெல்லாம் நாளுக்குநாள் குறைவுபட்டுக்கொண்டுவருகிற காரணமென்ன? அல்லது தாங்கள் யாருக்காவது பரித்துக்கொண்டுபோகும்படி உத்திரவு செய்திருக்கின்றீரோ? அப்படி யிருந்தால் இருக்கட்டும். இல்லையாகில், இந்த புட்பங்கள் களவுபோகும்விதத்தை நன்றாய் விசாரிப்பீர்கள்.

அரசன் வசனம்.

மாதே சந்தியாவளி! என்னவிபரீதம்? நமது பூந்தோட்டத்திற் புட்பிக்கும் அருமையான பலஜாதிமலர்களை களவுசெய்துக்கொண்டுபோகிறாரென்றால் அதி ஆச்சரியமாயிருக்கிறது. நந்தவனத்திலொருவரும்பிரவேசிக்காதிருக்கும்படி காவலாளிகள்காத்துக்கொண்டிருக்க கள்ளர் எந்தவிதமாய் உட்பிரவேசிப்பார். நல்லது நான் இன்றையதினம் அதை தீர விசாரிக்கின்றேன்.

அரசன் விருத்தம்.

பக்குவாபக்குவங்கள் பரிந்துடனுரைத்துயென்றன்
பக்கலில்வீற்றிருக்கும் பகாருமமைச்சனேகேள்
தக்கபூஞ்சோலைதன்னில் தழைத்திடுமலர்களெல்லா
மிக்கவேகளவுபோகும் விதமதைவிசாரிப்பீரே.

வசனம்.

அரசர்களுடைய பக்குவகாலங்களையறிந்து அதற்குதக்க மறுமொழிகளுரைக்கும் மதிமிகு மந்திரிமாரே! நமது நாட்டிலுள்ள ஆலயங்களுக்கும் அந்தபுரத்தில் நடக்கும் திரு ஆராதனைகளுக்கும் அர்ச்சிக்கவேண்டி நாம் நந்தவனம் ஏற்படுத்தினோமல்லவோ அவ்வனத்தில் புட்பிக்கும் மலர்கள் சரியாய் ஆராதனைக்குதவாமல் குறைவுபட்டு களவுபோகுங் காரணத்தை விசாரிப்பீர்.

மந்திரி வசனம்.

நல்லது மஹாப்பிரபு! நமது பூந்தோட்டத்திற்குகாவலாயிருக்கும் சேவகனைவரவழைத்து இதினுதை தெரியப்படுத்துகிறேன் மஹாராஜ்.



மந்திரி வசனம்.

ஆரடா சேர்வை! நந்தவனக்காவலனை அதிசீக்கிரத்தில் அழைத்துவா

சேர்வை வசனம்.

அப்படியே புத்தி. அய்யா நந்தவனக்காவலரே! உம்மை அதிதீவிரமாய் கொலுமுன் அழைத்துவர உத்திரவாயிருக்கிறது. ஆகையால் சீக்கிரம் புரப்படும்.

வனக்காவலன் வசனம்.

அப்படியா யிதோ வருகிறேன்.

வனக்காவலன் விருத்தம்.

மன்னுயிரெல்லாந் தன்னுயிர்போல
மாணிலத்தெண்ணியேநீதி
இன்னலில்லாமல் காத்திடுமெங்கள்
யிறைவரே யெளியனேன்றன்னை
என்னகாரணமாய் தேவரீரழைத்த
வியர்க்கையைமகிழ்ச்சியோடெனக்கு
பன்னவேவேண்டுமையனே உமது
பதமலர்க்கென்றுமேபோற்றி.

வசனம்.

புகழ்பெற்றோங்கிய விதிசாபுரத்துள்ள மன்னுயிர்களையெல்லாந் தன்னுயிர்போல் மதித்து குற்றமின்றியும் மனுமுறை பிசகாமல் இராஜ்ஜியபரிபாலனஞ்செய்துவாநின்ற யெந்தையே சேவகனாகிய எளியனை தமது கொலுமுன்னர் யாதுகாரணத்தினாலோ தேவரீர் வரவழைத்த செய்தியை திருவுளம்பற்றவேண்டுமென்று வனசமலர்ப்போன்ற தமது பாதத்திற்கு சரணடைந்தேன் சுவாமி.

மந்திரி காவலனைகேட்கும் விருத்தம்.

சுந்தரமாய்விளங்குஞ் சுகந்தபூங்காவுதன்னில்
விந்தைசேர்மலர்களெல்லாம் விரைந்தேதோகளவுபோகு
மிந்ததற்சேதிதன்னை யிறைவனுங்கேட்டுமெத்த
சந்தேகங்கொண்டுஉன்னை தானழைத்திட்டார்காணே.

வசனம்.

சொல்லுதற்கு அரிதாகியும், பார்ப்பதற்கு விநோதமாகியும் விளங்காநின்ற நமது நந்தவனத்தில் புட்பிக்கும் மலர்களெல்லாம் நாளுக்குநாள் குறைவுபடுவதாக மஹாராஜன் கேள்வியுற்று மனதில் சந்தேகங்கொண்டு உன்னை விசாரிக்கும்படியாக யிவடம் வரவழைத்தோம். இதின் விபரத்தை தெரிவிக்கவேண்டும் காவலனே.

தலைக்காவலன் வசனம்.

மஹாபிரபுக்களே நமது பூந்தோட்டத்திலுள்ள புட்பங்கள் களவுபோகிறதென்று தாம் நவின்றதைக்கேட்டு என்னுள்ளம் நடுங்குகிறது. தேகம்பதைக்கிறது. இது பரியந்தம் இப்பேர்ப்பட்ட மொழியைக்கேட்டறியேன். வொவ்வொருநாளும் சூரிய அஸ்தத்தில் மலரும் பலஜாதிபுட்பங்களையும் எனதுகண்ணாரப்பார்த்துவருகிறேன். காலையில் தோழியம்மாள் வந்து பரித்துக்கொண்டுபோகிறவழக்கம். அந்தம்மாள் தவிர மற்ற வேறு மனிதர் நமதுநந்தவனத்தில் பிரவேசிக்கிறதில்லை ஆகையால் இதின் விபரத்தை பாங்கியரைக்கேட்டால்தெரியவரும் மஹாராஜனே.

மந்திரி விருத்தம்.

ஊனமதின்றியந்த வுயர்வனங்காக்கும்வீரா
ஆனந்தரவிமேற்பக்க மடைந்தபின்பதுவிருந்து
தேனமர்ந்திருக்கும்புட்பந் திருடியகள்ளர்தம்மை
கோனந்தன்கொலுவின்முன்னே கொண்டுநீவருகுவாயே.

வசனம்.

குறைவில்லாமல் ஜாக்கிரதையோடு செழிப்புற்றோங்கிய நந்தவனத்தை காவல்புரியுங் காவலனே! சூரியன் மேற்குத்திசையில் மறைந்தபின் இருளில் வொளித்துக்கொண்டிருந்து புட்பங்களை களவுசெய்துக்கொண்டுபோகிற கள்ளனைபிடித்துக்கொண்டுவந்து நமதரசன்முன்னிலையில் விடவேண்டும். இல்லாவிடில் உங்களுக்கு ஆக்கினைசம்பவிக்கும் போங்கள்

தலைகாவலன் வசனம்.

அடா தம்பிமார்களே! நமதுபூந்தோட்டத்தில் புட்பங்களெல்லாங் களவுபோகிறதென்று மஹாராஜா மெத்தவும் கோபித்துகள்



ளை பிடித்துவர உத்திரவாயிருக்கிறது ஆகையால் ஒருவரும் இரவு நித்திரையில்லாமல் அந்ததிருடனைபிடிக்கவேண்டும் ஜாக்ரதை.

அண்ணமாரே! நாமிந்த இருளில் எங்குதேடியும் ஒருவரும் நமது கண்ணுக்குப் புலப்படவில்லை. இப்பொழுதோ மூன்று ஜாமமாய்விட்டது இனிமேல் யார்வரப்போகிறார்கள் எனக்கு நித்திரை அதிகரிக்கின்றது திரும்புவோம் வருவீர்கள். வேண்டாம் அண்ணே பொழுது விடிகிற பரியந்தம் விழித்திருந்து எப்படியாவது கள்ளனை பிடிக்கவேணும் அப்படி பிடிக்காவிடில் நமக்கு சிரசாக்கினைவரும். நாம் மறுபடியும் வடபாரிசமாக போய் பார்த்து வருவோம் வருவீர்கள்.

தலைக்காவலன் வசனம்.

அடே தம்பிமார்களே! இங்கு யாரோ ஒரு சன்னியாசி தவம் செய்பவன்போல் நம்மைகண்டுவிட்டு பேசாமல் உட்கார்ந்துக்கொண்டிருக்கிறான் இவன் புட்பங்களெல்லாம் பரித்துக்கொண்டுபோகிறவன்போல் காணுகிறது ஆகையால் இவனை நமது அரசன் முன் பிடித்துக்கொண்டுபோவதே சரி.

வனக்காவலன் விருத்தம்.

ஆனையாயின்னேரத்தில் அடர்ந்தயிவ்வனத்திலுன்னே
சோரனைப்போலநீகுந் துணிந்திங்குவருகுவானேன்
பேரென்ன வூர்தானென்ன பிறழாமலதையெமக்கு
சீரதாயுரைக்காவிட்டால சிரமதுகொய்வோமிக்கணமே.

வசனம்.

அய்யா நீர் யார் இந்த யிருளில் கள்ளனைப்போல் உட்கார்ந்திருக்கவேண்டிய காரணமென்ன எந்த வூர் உமது பேரென்ன இவைகளை சீக்கிரஞ்சொல் அப்படி சொல்லாவிட்டால் எங்களுக்குண்டாகிய கோபத்தால் உம்மை தெண்டிப்போம்.

ஜாபாலர் விருத்தம்.

கையில்மான்மழுதரித்தக் கர்த்தனைமனதில்நாட்டி
செய்யநற்றவமியற்றும் ஜாபாலனென்பேர்கண்டீர்
பையவேநீங்களென்னைப் பகுத்தறியாமல்கேட்ட
அய்யமேதனையுமிந்த அரும்வனக்காவற்காரே.

வசனம்.

அழகிய மென்கரத்தில் மான்மழுதரித்த பரமசிவத்தினடிகளை சதா மனதில் நிறுத்தித் தவம்புரியும்படியான ஜாபாலரிஷியாகும் யான் என்னை நீங்கள் கொஞ்சமேனும் பாராமல் அதட்டி யார் யெவரென்று ஞாய நட்பந்தெரியாமல் கேட்ட சந்தேகத்தை வெளிப் படுத்துவீர்களப்பா.

காவலர் வசனம்.

ஆ ஹா ஒருக்காலும் நாங்கள்நம்பமாட்டோம் நந்தவனத்தில் புட்பிக்கும் புட்பம் களவுபோகிறதற்கு காரணம் நீதான்போல் காணுகிறது நீரிங்கு தாமதிக்காமல் மஹாராஜாகொலுமுன்னெழுந்து வாரும் அவடத்தில் தமது செய்திகளைதெரியப்படுத்தும். சீக்கிரம் நடவும்.

ஜாபாலர் தரு.

இ-ம். பியாக் தா - ஆதி.

கங்காதரா பெருக் கிருபாசமுத்திரா கங்கா.

பொங்குந்தயாளிதே புகலுமாராவமுதே
துங்கவாயெனையிப்போதே சோதிப்பதுந்தகாதே கங்.

அரவாபரணா அரும்வேதபூரணா
இருவினைச்சேரொணா தெனக்கருள்காரணா கங்.

சிவகாமிநேசா சீர்கைலைவாசா
தவமார்முனிவரீசா தமியேனையாள்சர்வேசா கங்.

காவலன் வசனம்.

மஹாராஜனே நந்தவனக்காவலன் வந்தனஞ்செய்கிறேன். இராமுழுதும் வொளித்திருந்துப் பார்த்துக்கொண்டிருந்தோம். வொருவரும் அகப்படாமல் கடைசியாக வடமூலையில் பார்வையிட்டுக்கொண்டுவருந்தருவாயில் இந்தரிஷியானவருட்கார்ந்திருந்தார் இவரால் புட்பங்கள் களவாகிறதென்று சந்தேகங்கொண்டுபிடித்து வாயினோம் சுவாமி.



அரசன் போற்றி தரு.

இ-ம் ஹிந்துஸ்தான் பியாக் - தா - ஆதி.

பசுபதியதமதை பணிந்துமேதவம்புரி
பகருமுனியே பாலனும்போற்றி பசு.

பாவிகளிவர்செய்த பழிபதைப்போக்கி
பாதுகாப்பீர் பாதமேபோற்றி பசு.

அடியவர்விஷயத்தில் அபசாரமடைந்த
அற்பனையுமெனையு மாளுவீர்போற்றி பசு.

சிறியவர்செய்த சிறுபிழையனைத்துஞ்
சித்தமதிற்கொள்ளா திருக்கவேபோற்றி பசு

அரசன் விருத்தம்.

அறிவிலாதவனேபுட்ப மபகரித்தேருமந்த
நெறியிலார்தம்மைக்கட்டி நெட்டியேவாவென்றேதப்
பொறிபுலன்தனையடக்கிப் பொருந்தவேதவமியற்றிக்
குறிதெரிந்தவர்கடம்மைக் கொணர்ந்ததைப்பொறுக்கப்போமோ.

வசனம்.

அடா புத்தியில்லாப்பேயனே பூங்காவனத்திலுள்ள மலர்களை களவுசெய்பவரைப்பிடித்துவாவென்று கட்டளையிட்டனுப்பினால் அவரைக்கொணராமல் ஐம்புலனையடக்கிதவஞ்செய்யும் முனிசிரேஷ்டரை புட்பமெல்லாம் இவரால் களவாகிறதென்று என்முன் கொண்டுவந்தீர்கள் அடாமூடமதிகளே உலகஆசையைவெறுத்துத் தபவேஷம்பூண்டு அதி சுத்தமாய் விளங்கும் இவரோ அல்பவஸ்துவாகிய புட்பங்களை அபகரிக்கப்பட்டவர் ஆஹா இந்த அபராதத்தை மன்னிக்கத்தரமோ பாவிகளே.

தலைகாவலர் வசனம்.

சுவாமி ! நாங்கள்யென்னசெய்வோம் இராவில்வனமுழுதும் தேடியாருமகப்படாமையால் இவரைக்கண்டு சந்தேகங்கொண்டு இவர்தான் இக்காரியத்தில் பிரவேசித்திருப்பாரெனக்கொண்டுவந்தோம் ஆகையால் க்ஷமிக்கவேண்டும் மஹாப்பிரபுக்களே.

அரசன் விருத்தம்.

இருவினைப்பயனொழித்த யிடரிலாமுனிவேயிந்தக்
கருமிகள்செய்ததீங்கைக் கருத்தினிற்கொண்டிடாமல்
கருணையங்கடலேயெம்மைக் காப்பதுன்கடனேயென்றுந்
திருமலர்தாள்தனக்குத் திருத்தமாய்தொழுதிட்டேனே.

வசனம்.

சர்வத்தையும் வொழித்துபரமேசனைமனதிலிருத்தி சாக்ஷாத் காரமாய்விளங்கும் முனிசிரேஷ்டரே யிந்தச்சண்டாளர்கள் செய்த துர்க்ருத்தியத்தை மனதில்வையாமல் கருணைபொழியும் என்னைய னே எம்மைக்காப்பது தங்களுடைய கடனாக்கும்.

ஜாபாலர் தரு.

இ-ம்.' சாமா கல்யாணி தா - ஆதி.

நரபதியேநான் நவிலுவதைகேளும்

புரமெங்கும்புகழ்பெறும் புகலருங்காவின்
அருமலர்கொய்யும் அயலரைக்காண்விதம்

வசனம்

ராஜா நான் சொல்லுவதைக் கவனமாய்க்கேள் பூலோகமெங் கும் புகழ்பெற்றோங்கும் உனதுநந்தவனத்தில்பிரவேசித்துபுட்பம் பரித்துக்கொண்டுபோகிறவர்களைக் காணவேண்டுமானல்.

தரு.

குணமில்லாக்கொம்மட்டி கோதுருங்கத்தாரி
தினமுந்தன்வனத்தில் தீப்படச்செய்வீரேல் நர.

வசனம்

உனது நந்தவனத்தில் தினந்தோறும் கொம்மட்டிகத்தாரியி வைகளை தீயிட்டெரித்துக்கொண்டிருந்தால்.

தரு

களவுசெய்யுங்கள்ளர் காணுவாருண்மையாய்
தளர்விலேசொன்னேன் தக்கநேருபாயம் நர.



வசனம்.

புட்பங்களைபரித்துக்கொண்டுபோகும் கள்ளர் அகப்படுவார் கள் யாதொரு சிந்தையில்லை.

அரசன் வசனம்.

சுவாமி தாங்கள் அந்தநந்தவனத்திலேயேதவம்புரியவேண்டும் அடா காவலனே ! நந்தவனத்தில் கொம்மட்டிசெடி, கத்தாரிசெடி இவைகளை தீயிட்டெரித்துக்கொண்டிருந்தால் புஷ்பங்களவுசெய்து போகுந்திருடர்அகப்படுவார்கள்அதிஜாக்ரதையுடன்பார்த்துக்கொ ண்டுவரவேண்டும்.

காவலர் வசனம்.

அப்படியே செய்கின்றோம் மஹாராஜனே.

அதிகுணன், அதிவதனன் தரு.

இ-ம் செஞ்சுருட்டி தா - திசிரம்.

சுந்தரமலர்கள்கொய்யவே செலவோம் செல்வோம் வேகமாய்

விந்தைசேருக்மாங்கதனின் வியன்கொள்பூங்காவனத்தில்
நிந்தையில்லாமலரதை நேராய் நேராய் நோக்கியே சு.

அதிகுணன் வசனம்.

அதிவதனா மண்ணுலகத்தில் சிறப்புற்றோங்கிய ருக்மாங்கத மஹாராஜனுடைய நந்தவனத்திலுள்ள அழகியமலர்களைக்கொய்யப் போகலாம் வருவாய்.

அதிவதனன் வசனம்.

அப்படியே செல்வோம்.

தரு

பந்தமாய்நமதரசன் பரந்தாமனையர்ச்சிக்க
கந்தமலர்பறிக்கவே காவிலேவிரைவினி.

அதிகுணன் வசனம்.

நமதரசனாகிய அமரேசன் அதிவினயத்துடன் சாக்ஷாத்பரந் தாமனை யர்ச்சிக்கும்பொருட்டு திவ்வியமலரெடுக்கச்செல்வோம்.

தரு

அந்தமிகும்வனத்தை அடைந்தோநாமிருவரும்
வந்தனைநறுமலரதை வாகாய் வாகாய் கொய்யுவோம்

அதிகுணன் வசனம்.

அதிவதனா யிதோநாம் நந்தவனமடைந்தோம் யினிபுட்பம்பறிக்கலாம்.

அதிகுணன் அதிவதனன் மலர்ப்பரிக்குந் தரு.

இ-ம் நாதநாமக்கிரிகை தா - ஆதி.

வாராய்மலர்க்கொய்வோ மதிவதனா
சீராயோங்குமிந்த வனந்தனிலே — வாராய்

நேரமானாமலே நீயந்தரோஜா
சோர்விலாமல் சொகுசாய்பரிக்கவே
சீக்கிரமாய் விண்ணைநாடிபோகவே — வாராய்

அதிவதனன் சொல்லல்.

வேகமாகப்பறிப்பேனதிகுணா
போகவிந்திரன்சொன்னவாறுபோலவே — வேக

மல்லிமுல்லையுடன் மருவுமந்தாரையும்
அல்லிமலர்கொய்தே னிதோயானுமே
ஆவலாய்ப்போக யேனின்னஞ்ஜாலமே — வேக

அதிகுணன் சொல்லல்.

தரு.

நந்தியாவட்டமு நல்லசாமந்தி
நானிலம்புகழ் தாமரையாமலர்
கலம்பெறவழுத்திட்டேனானுமே — வேக

அதிகுணன் வசனம்.

ஆ ஹா என்ன ஆச்சரியம் அதிவதனா நமது விமானம் பூமியில் அழுந்திவிட்டது என்னகாரணம்.



அதிவதனன் வசனம்

இதென்ன விபரீதம் நாம்யெப்படி செல்வது.

அதிவதனன் தரு

இ-ம். சாரங்க - காபி தா - திசிரம்.

என்னநாம்செய்வோமினி
எப்படிசொல்லுவோம் — என்ன.

பின்னமாகுமேபூசை புரந்தரன்கோபங்கொண்
டென்ன ஆக்கினையெமக்கேயிவானோ யீசனே — என்ன

வசனம்.

ஜெகதீசா யென்னசெய்வோம்ஐயோபூசைவேளை தப்பிவிடுமே இந்திரன் கோபத்தினால் யெமக்கென்ன ஆக்கினை விதிப்பாரோ.

தரு

எவர்செய்தசூதோ யெங்களின்விமானம்
அவலமாகவேமண்ணதி லழுந்தியதேயீசா — என்ன

வசனம்.

ஐயோ வீணாய் எமது விமானம் மண்ணிலழுந்திப்போய்விட்டதே யிது யாருடைய சூதோ.

தரு

பொழுதுவிடியபோகுதே பொன்னுலகமேகவே
பழுதுவந்துநேர்ந்ததே பரந்தாமாகாப்பாய் — என்ன

வசனம்.

ஆ ஹா சூரியோதயமாகப்போகின்றதே விண்ணுலகமேகவொட்டாமல் விந்நேர்ந்ததே பரந்தாமா யிந்தவேளையில் நீ தான் காக்கவேண்டும்.

காவலர் வசனம்.

அடா தம்பிமார்களே ! நமது நந்தவனத்திலுள்ள புட்பங்களை

களவாடிக்கொண்டுபோகிறவர்களைப் பார்த்தீர்களா இவர்களைப் பிடித்து நமது அரசனிடம் கொண்டுபோகவேண்டும். ஐயா இந்த நந்தவனத்திலுள்ள புட்பங்களைப் பறித்துக்கொண்டுபோகிறவர்களைப் பிடித்துவரும்படி அரசன் ஆக்ஞையாயிருக்கிறது நீங்கள் அவ்வாறு செய்தமையால் எங்களரசனிடம் வரவேண்டும்.

அதிகுணன், அதிவிதனன் வசனம்.

ஐயா காவலர்களே அப்படியே வருகிறோம்.

காவலர் வசனம்.

மஹாராஜனே நந்தவனத்தின் புட்பங்களைப் பறித்துக்கொண்டுபோகப்பட்டவரை இதோ பிடித்துக்கொண்டுவந்தோம்.

**அரசன் வசனம்.**

அடா பாவிகாள் என்னவிபரீதமான காரியஞ்செய்கிறீர்கள் முன்னம் மஹாதபசியாகிய ஒருரிஷீஸ்வரரைத் திருடனென்று பிடித்துக்கொண்டு வந்தாய் இப்பொழுது இவர்களை நோக்குமிடத்து தெய்வலோகத்தில் வசிப்பவரைப்போல் காணுகின்றது அப்பேர்ப்பட்டவர்களை பிடித்துக்கொண்டுவந்தனை யிதனால் யென்னதீங்குகள் நேரிடுமோ தெரியவில்லை அடா சண்டாளா உன்னைப்பிறகு விசாரிக்கின்றேன்.

அரசன் விருத்தம்.

விண்ணொளிமுகம்படைத்த வீரரேநீங்களெந்த
மண்ணினில்வசிப்போரிங்கு மயங்கிடுங்காரணத்தை
வண்ணமாயெந்தனுக்கு வழுவின்றியுரைப்பீர்கள்
தண்மையர்பாதந்தன்னைச் சதுருடன்பணிந்திட்டேனே

வசனம்.

சந்திரனொளியைப்போன்ற முகத்தையுடைய வீரர்களே நீங்கள் எங்குவசிப்பது இவ்விடத்தில் தயங்கிநிற்கும் காரணம் யாது இதை யெனக்கு விஸ்தாரமாய் தெரிவிக்கவேண்டும். உங்களுக்கு பலமுறையும் வந்தனஞ் செய்கின்றேன்.



அதிகுணன் விருத்தம்.

அவனியில்கீர்த்திபெற்ற வாசனேயிந்த்ரன்செய்யுந்
தம்பெறுபூசைக்காக தனிமலரெடுக்கவந்தோம்
பவனத்தில்வசிப்போரியாங்கள் பழுதிலாவெம்விமானம்
அவலமாயழுந்தயிங்கு யலைகிறோமறிகுவீரே.

வசனம்.

பகவத் கைங்கரியதுரந்தர சீலனே அரியயைத் திருவாராதனஞ்செய்கின்ற விண்ணுலகத்தரசனாகிய அமரேசன் நிமித்தியம் உம்முடைய புண்ணியவனத்திலுள்ள புஷ்பங்களைக்கொய்தவர்களாகிய நாங்கள் விண்ணுலகவாசிகளாக்கும் நாங்கள் ஏறிவந்தவிமானம் வீணாய்ப்பூமியில் அழுந்தியது இதைக்கண்டு நாங்கள் தயங்கிநிற்கையில் உம்முடைய காவலர் எம்மை பிடித்துக்கொண்டுவந்தார்கள்.

அரசன் வசனம்.

ஐயா தங்களுடைய விமானம் பூமியிலழுந்திய காரணத்தை என்மீதுங் கிருபைகூர்ந்து தெரிவிக்கவேண்டும்.

அதிகுணன் வசனம்.

மண்ணுலகில் கீர்த்தியை நிலைநாட்டிய நரபதியே தம்முடைய நந்தவனத்தில் நாங்கள் புட்பம் பறித்துக்கொண்டு திரும்புகையில் கொம்மட்டி கத்தரி இவைகளைத் தீயிட்டெறித்தமையால் அதினின்றும் எழும்பிய தூமம் பட்டமாத்திரத்தில் எமது விமானம் பூமியில் அழுந்தியது ஆதலினால் நாங்கள் விண்ணுலகமடையக்கூடாமையாயிற்று. புஷ்பங்களும் சர்வேஸ்வரராகிய ஸ்ரீ அரியினுடைய பாதகமலங்களுக்கு உதவாமல் போய்விட்டது. உதாரகுணசீலனே எமது விமானத்தை கிளப்பி எங்களை விண்ணுலகம் அனுப்ப உமக்கிஷ்டமிருந்தால் ஏகாதசிவிரதபலத்தை எமக்கு தத்தஞ்செய்யவேண்டும்.

அரசன் வசனம்.

ஐயா ஏகாதசிவிரதமென்பது இன்னதென்று அடியேனுக்குத் தெரியமாட்டாதே அதை யனுஷ்டித்தவர்களும் இன்னவரென்று தெரியவாராதே.

அதிகுணன் வசனம்.

ஏ சத்தியவிரதபூபாலனே உனக்கொன்றுந்தெரியமாட்டாதெ ன்பதுநிஜமே உம்முடைய பட்டஸ்திரீகளில் சிறந்தவளாகிய சந்தி யாவளிதேவி நந்தவனத்தில் புட்பங்கள் தினந்தோறும் குறைந்து க்கொண்டுவருகிறதென்று தனது தோழிப்பெண்ணைக்கண்டித்து சி றையிலடைத்தனள் அவள் அன்றுவொருவேளைபோசனத்தோடிருந் து மறுநாள் முழுமையும் போஜனம் இல்லாமையாலும் துக்கத்தி னலும் அன்றிராமுழுமையும் நித்திரையும் இல்லாமல் இருந்தனள் மூன்றுநாள் உதயத்தில் அவள்மேல்கருணைவந்து சந்தியாவளிதேவி அவளை ஸ்நானம்பண்ணி போஜனஞ்செய்ய[illegible]வ்வாறே செய்தனள் அந்த மூன்றுநாள்களில் ஒருவேளை போஜனத்தோடி ருந்தமுதல்நாள்தசமியாகவும், போசனமும் துக்கத்தினல் நித்திரை யுமில்லாமல் இருந்த இரண்டாம்நாள்ஏகாதசியாகவும், உதயத்திலே நீராடி ஒருவேளை போஜனத்தோடிருந்த மூன்றாம்நாள் துவாதசியா கவும் அவள் அனந்தகோடிஜென்மங்களிலே செய்தபுண்ணியவசத் தால் கேரிட்டு மகாபலனை அடைந்திருக்கின்றாள். அவளைக்கொண் டு அந்த பலனை எமக்கு தத்தஞ்செய்விப்பாயேயானல் உனக்கு அதிக சுகிர்தமுண்டு,

அரசன் வசனம்.

அப்படியா ஆனல் சற்றுதயைசெய்து யிங்குதானிருப்பீர்கள் தாங்கள கோரியவாறு யிதோ செய்விக்கின்றேன்,

அரசன் வசனம்.

சகி உனது தாசியை புட்பங் குறைகிறதென்று கண்டித்து சிறையில் வைத்தனைடா.

சந்தியாவளி வசனம்.

பிராணநாத் ஸ்வாஸ்தியவந்தான் நமது நந்தவனத்தில் பிரதி தினமும் புட்பங்கள் குறைந்துக்கொண்டுவருகிறதென்று கண்டித்து சிறையில்வைத்தேன். அவள் இரண்டுநாளாக அன்னமருந்தாமல் அழுதுக்கொண்டிருந்தனள். பிறகு மூன்றுவதுநாள் அவளை நீராடி போஜனஞ்செய்ய கட்டளையிட்டேன் அவள் அவ்வாறே செய்திரு க்கிறள் அதற்கென்ன யிப்பொழுது.



அரசன் வசனம்.

சகி பிறகு தெரிவிக்கின்றேன் முன்னம் அப்பெண்ணை வரச் செய்வாய்.

தோழி வசனம்

மஹாராஜனே வந்தனஞ்செய்கின்றேன்.

அரசன் வசனம்

தோழி என்பின்பற்றிவருவாய்.

116640

அரசன் வசனம்.

நீயடைந்திருக்கும் ஏகாதசிவிரதபலனையிவர்களுக்குத்தத்தஞ் செய்வாய்.

தோழி வசனம்.

ஏகாதசிவிரதமென்று லென்ன எனக்கொன்றுந்தெரியவாராதே.

அரசன் வசனம்.

தோழி பிறகு தெரிவிக்கின்றேன் முன்னம் தத்தஞ்செய்வாய்.

தோழி வசனம்.

அப்படியே செய்கின்றேன் மஹாராஜ.

தாசி தத்தஞ்செய்தவுடன் யிருவரும் விமானமேறிசெல்லுதல்,

அதிகுணன் அதிவதனன் தரு.

இ-ம் சாமா தா - ஆதி.

போவோம் போவோம் விமானமேறி பொன்னுடு போவோம்

காவினிலேமலர்ந்த கனமலரைப்பறித்தோம்
நாவுஞ்சிங்கமதுபோல் தாரணியைவிட்டு போவோம்

அச்சுதன்பூசைக்குநேர மாச்சுதென்றுகம்மேல்
உச்சிதஞ்சேரிந்தரன் வோஹோகோபங்கொள்வார் போவோம்

அதிவதனன் அதிகுணன் வசனம்.

ஏ மஹோபகாரியாகிய சந்திரவம்சராபாலனே நீ தசமியில்நேர் த்தோடிப் பன்னிரண்டு வார்த்துவபுண்டாந்தரித்து ஒருவேளை அன் னத்தைப் புசித்துத் தொடக்கஞ்செய்து ஏகாதசியிலும் தீர்த்தமா

டித் திருமண் தரித்து திருத்துழாயுதகமூண்டு ஆகார நித்திரைகளை யொழித்து அரியினுடைய குணானுபவஞ்செய்து மறுநாள் துவாதசியில் சூரியோதயத்திற்குமுன் தீர்த்தமாடிப் பனிரெண்டு திருமட்குறிகளையும் அணிந்துகொண்டு துளசியாலும் திவ்வியபரிமளகந்த புஷ்பங்களாலும் அரியை யாராதித்துத் துளசிதீர்த்தமூண்டு ஸ்ரீபாகவதோத்தமராகிய ஒரு அதிதியையழைத்துவந்து அவரோடு திவ்வியான்னத்தைப்புசிக்கக்கடவாய். ஸ்ரீ அரிநாமசங்கீர்த்தனஞ்செய்துகொண்டு அவருடைய ஆலயங்களில்போயிருந்து நித்திரையில்லாமலே அன்றுபகற்பொழுதையும் போக்கி யிவ்வாறு ஏகாதசிவிரதத்தை யனுஷ்டிக்கக்கடவாய் இந்தவுபவாசமிராதவர்கள் அரியின் கட்டளையைமீறினவர்களாகிறார்கள். அவர்கள் நரகமடைவதற்குச் சந்தேகமில்லை ருக்மாங்கதமஹாராஜனே யிதுதான் எம்மால் உனக்குச் செய்யத்தக்க பிரதியுபகாரம்.

**இந்திரன் விருத்தம்.**

மாயவன்பூசைக்காக மலரெடுக்கக்கொய்யநீங்கள்
நேயமாய்சென்றின்னேரஞ் ஞாலமேலென்னசெய்தீர்
தேயுபோற்கண்ணிரண்டுஞ் சிவக்கவேபொறிகலங்கத்
தாயமுற்றோடிவந்த சங்கையையுரைசெய்வீரே.

பரந்தாமனுடைய பூசைக்காகமண்ணுலகில் புட்பமெடுத்துக் கொண்டு வரச்சென்ற நீங்கள் இவ்வளவு நேரஞ்சென்று உங்கள்நேத்திரங்களில் அக்கினிச்சுவாலைவீச வெகு அவசரமாக வோடிவந்த காரணமென்ன வெளியிடுவீர்கள்.

அதிகுணன் அதிவதனன்.

இந்திரனுக்கு சவிஸ்தாரஞ்சொல் தரு.

இ-ம். குல்ரோஜ் தா - ரூபகம்.

சொல்லுவோமையாங்களங்கு நடந்தசேதியைத்தானே
சினம்வையாமலே கேட்டருளுந்தேவர்கள்கோனே

வசனம்.

தேவர்கோனே நடந்த விஸ்தாரத்தை தெரிவிக்கின்றோம் எங்கள் பேரில் கோபிக்காமல் கேட்டருளுக யாசிதயே.



தரு.

விமானமேறிவந்தவன மடைந்தோமையனே
விளங்கும்புட்பந்தன்னைக் கொய்து விரைவில்தூய்யனே.

வசனம்.

நாங்கள் விமானமேறி பூங்காவனமடைந்து திவ்விய புட்பங்களைக்கொய்து அதிசீக்கிரமாய்

தரு

விண்ணதைநாடிவரவேயெம் விமானமேறவே
வித்தகாமண்ணிலமிழ்ந்தக்கண்டு விதனமீறவே

வசனம்

இவ்வுலகத்திற்குவர விமானமேறியவுடன் அது மண்ணில் அழுந்தக்கண்டு துக்கமீறி தயங்கிநிற்கையில்

தரு

காவல்செம்மைருக்மாங்கதன்முன்னர்விட
கண்டாசன்பணிந்துயெவ்வூர்சொல்வீரென்றிட

வசனம்.

வனக்காவல்செம்மைப் பிடித்துருக்மாங்கதமஹாராஜன் முன்விட அவ்வரசன் எம்மைக்கண்டுபணிந்து எமது சேதியைக்கேட்க

தரு

எமதுசேதியன்னவர்க்கு யெடுத்துரைத்துமே
ஏகாதசிபலன்தத்தஞ்செய்ய யிங்குற்றோம்நாமே.

வசனம்

நாங்கள் நடந்த சவிஸ்தாரத்தைச் சொல்லி ஏகாதசிபலனை யன்னவனைக்கொண்டு தத்தஞ்செய்விக்கச்செய்து நாங்கள் நேரஞ் சென்று வந்தால யென்ன ஆக்கினையிடுவீர்களோ வென்று பயந்து அதிசீக்கிரமாய் யிங்குற்றோம் மன்னிக்கவேண்டும் பிரபு.

இந்திரன் ருக்மாங்கதனைப் புகழுதல்.

தரு

இ-ம். இந்துஸைதானி தோடி - தா - ஆதி.

பூபாலரிற் சிறந்தசீமானே
தாபமில்லாமாண்புற்றவனே — பூபா

உத்தமனாவனென்று வொப்பிலானானே
உம்பர்புகழ வுடம்பாகிறேனே — பூபா

சித்தமகிழ்வதாய் சீரேகாதசிபலன்
சிறப்பாய்த்தந்த செய்தசிகாமணி — பூபா

மண்ணுலகிலிவன்போல் மன்னவருண்டோ
வகையுடனென்றறக் கோதுவீரே — பூபா

அதிகுணன் வசனம்.

மஹாராஜ் பூலோகத்தில் அனேக அரசர்களிருக்கிறார்கள். அவர்களுடையகீர்த்தி ப்ரதாபங்களை நாம் கேட்டிருக்கிறோம். ஆயினும் ருக்மாங்கதனுடைய உதாரகுணமும் நீதி தெரியும் எவரிடத்தும்பொருந்தியிராது. மஹாபுத்திசாலி அவருடையகுணானுபவங்களைவர்ணிக்க எம்மாலாகாது மஹாஉத்தமன்.

இந்திரன் விருத்தம்.

மன்னரிற்சிறந்தருக்கு மாங்கதன்தனக்கு கீர்த்தி
நன்னலாய்தருகுமந்த நவிலருமேகாதசியின்
உன்னதவநுஷ்டிப்பை நீ ரொளியாமலுனைத்திட்டமா
முன்னதாயதையெனக்கு மொழிகுவீர்மொழிகுவீரே.

வசனம்.

கீர்த்தியை வகித்த ருக்மாங்கதமஹாராஜனுக்கு ஏகாதசிவிரதத்தின் மகிமையையும் அதையநுஷ்டிக்கும்விதத்தையும் அவருக்கு நன்றாக வுரைத்தீர்களா.

அதிகுணன் வசனம்.

ஏகாதசிவிரதத்தின்பலனையும் அநுஷ்டிக்கும் விதத்தையுந்தெரிவித்து அதையநுஷ்டிக்கும்படி சொல்லிவந்தோம் மஹாராஜனே.



ருக் - அரசன் வசனம்.

மந்திரி நமக்கு கப்பங்கட்டும்படியான அரசர்களுக்கெல்லாம் ஏகாதசிவிரதத்தை யநுஷ்டிக்கும்படி திருமுக மனுப்புவதுமன்றி அவ்வூரிலுள்ள குடிகளும் அவ்விரதத்தையநுஷ்டிக்கும்படிதெரிவிக்கவேண்டியது. அன்றியும் நமதுநகர்தோட்டியையழைத்து எட்டு வயதுக்குமேற்பட்ட ஆண்பெண்முதலிய யாவரும் ஏகாதசிவிரதமநுஷ்டிக்கவேண்டுமென பறைசாட்டச்செய்வாய்.

மந்திரி வசனம்.

அப்படியே செய்கின்றேன் மஹாராஜனே.

மந்திரி வசனம்.

அடாகட்டியனே ராயசக்காரனையும் நமது நகர் தோட்டியையும் அதிதீவிரமாய் அழைத்துக்கொண்டுவருவாய்.

கட்டியன் வசனம்.

இதோ அழைத்துக்கொண்டு வருகின்றேன் மஹாராஜ்.

ராயசக்காரன் வசனம்.

போற்றி போற்றி மஹாராஜனே என்னையழைப்பித்த காரியந் தெரிவிக்கவேண்டும்.

மந்திரி வசனம்.

நமக்கு கப்பங்கட்டும்படியான அரசர்களுக்கு திருமுகமெழுதவேண்டும் என்னவெனில் ஏகாதசிவிரதத்தை அன்னவர்கள் அநுஷ்டிக்கவேண்டுமெனவும் அந்தந்தவூரிலுள்ள குடிகளுமவ்வாறே யநுஷ்டிக்கத்திட்டஞ்செய்யவேண்டுமென்றும்எழுதவேண்டும் அப்படி அனைவருக்கும் யெழுதி தூதர்களிடங் கொடுத்தனுப்புவாய்.

ராயசக்காரன் வசனம்.

அவ்வாறே செய்கின்றேன் மஹாராஜ் வந்தனஞ்செய்கின்றேன்.

தோட்டி வசனம்.

சரணம் ஆண்டவனே.

மந்திரி வசனம்.

அடா! நான்சொல்லுவதைப்போல் சொல்லி நமது நகரெங்கும்பறைசாற்றவேண்டும். அதென்னவெனில், எட்டுவயதுக்குமேற்பட்ட புருஷர்களும் ஸ்திரீகளுமாக சதுர்வர்ணத்தார்களும் ஒவ்வொருபட்சத்திலும்வருகின்ற தசமியில் பரிசுத்தஸ்நாநம்பண்ணி ரண்டு ஊர்த்துவபுண்டரந்தரித்துத் தொடக்கஞ்செய்து ஏகாதசியில் அவ்வாறேஸ்நாநடித் திருமண்ணிட்டுக்கொண்டிருந்து முழுயுகமுண்டு அன்றுமுழுமையும் ஆகாராதிகளையொழித்து ஸ்ரீபகவத்குணானுபவஞ்செய்து பொழுதுபோக்கித் துவாதசநாமங்களையுச்சரித்துத் திருமண்காப்புத்தரித்துக் கந்தபுஷ்பதூபதீபங்களால் அரியை ஆராதித்து நானாவிதமதுரபலவர்க்காதிகளைநிவேதனஞ்செய்து திருத்துழாய்த்தீர்த்தஞ்சுவீகரித்து பரந்தாமருடைய உபயசரணாரவிந்தங்களிலேயேபக்திசிரத்தையுள்ளபாகவதராகிய ஒருஅதிதியையுபசரித்துஅவரோடேகூட அன்னத்தைப் புசித்து ஸ்ரீபகவத்சேஷமாகிய கந்தபுஷ்பாதிகளைத்தரித்துக்கொண்டு அன்றுபகல் ஏகாதசி இராப்பொழுதிலிருந்தாற்போலவே நித்திரையில்லாமல் ஸ்ரீஅரியினுடையகோயில்களிலும் அவருடைய அநந்த கலியாணகுணானுபவங்களைச்செய்யாநின்ற இடங்களிலும் வாசமாயிருக்கக்கடவீர்களென்று பறைசாற்றுவாய்.

தோட்டி வசனம்.

ஆண்டவனே அப்படியே செய்கின்றேன்.

தோட்டி மேற்கூறியதைப்போல் பறைசாற்றுதல்.

நாரதர் ருக்மாங்கதமஹாராஜனிடம் வருதல்.

தரு

இ-ம் கானடா தா - ஆதி.

மாதவனே கருணைபுரிவாய் இரு, — மாதவ
மாசிலாரூபமே வாரணந்தொழுதகுரு — மாதவ

வாசவர்மேற்றுயில் வைகுந்தநாதனே
தேசுறுமேனியா சித்தமனைபோதனே — மாதவ





கருணைவாரிதியே சுபாருமோகனே
கருணாநிதேவரந் தாருங்ககவாகனே — மாதவ

நாரதர் திரிலோகசங்கதிகளையும் எடுத்தோதியபின்னர் ருக்மா[illegible]ரிடத்திலுள்ள விசேஷத்தை வினவுதல்.

நாரதர் விருத்தம்.

வாரிசூழ்லகில்வெற்றி வன்மையாயடைந்தாலல
சீரியர்மகிழச்செங்கோல் சிறப்புடன்புரியுமன்னன்
பாரிலுள்ளதிசயத்தைப் பார்த்தேகலாமென்றோதான்
கோரியேவந்தேனிங்கு சொற்றவாயதிருவாயே.

வசனம்.

பூவுலகில்கண் வெற்றிபெற்று கீர்த்தியுடன் செங்கோல்நடாத்தும் சிறப்புற்றிருக்கிற ருக்மாங்கதமஹாராஜனே! உனது நகரத்திலுள்ள அதிசயத்தைப்பார்த்துப்போகலாமென்றிருக்கிறனன் யேதாகிலுமிருந்தால் ஒருவாறு அதனை கதனிப்பாய்.

அரசன் தரு.

இ-ம் இந்துஸ்தான் பியாக் தா - ஆதி

கேளுங் கேளுங் கேளுமையனே — கேளுங்

ஆளுமென்பதியினி லமைத்தோர்நந்தவனம்
அற்புதஞ்சேர்மலரைத்தினம் — கேளுங்.

கள்ளரெவர்களோ கவர்ந்தேகுறாரென்று
காவலரைக் கடிந்தேனென்று — கேளுங்

வசனம்.

மஹாராஜ் எனது நகரத்தில் ஓர் நந்தவனம் வியற்றினன். அதிலுள்ள புஷ்பங்கள் தினப்பிரதி குறைந்துகொண்டேவந்தன அப்புஷ்பங்களைகளவாடிக்கொண்டு போகிறவர்களைப்பிடித்துக்கொண்டுவரவேண்டுமென்று நந்தவனக்காவலனைக்கண்டித்து இட்டஞ் செய்தனன்.

தரு

சென்றதோரேவலர் தேடிஜாபாலனை
சேர்ந்துகொணர்ந்தாரவனை          கேளுங்

வசனம்.

அக்காவலர்கள் நந்தவனத்தில் தவம்புரிந்துக்கொண்டிருந்த ஜாபாலரிஷியைப்பிடித்துக்கொண்டுவந்தனர்கள்.

தரு

கண்டடியேன்மனங் கலங்கினேன்போற்றிட
களவுகாரணஞ்சாற்றிட          கேளுங்

வசனம்.

அவனைப்பார்த்து மனக்கலங்கி அவர்கள்செய்த குற்றங்களை மன்னிக்கும்படி அவர்பாதத்தில் விழுந்து கேட்டுக்கொள்ள முனி சிரேஷ்டர் மனம்பொறுத்து புட்பங்களை களவாடிக்கொண்டுபோ கிறவர்களைகண்டுபிடிக்கும் மார்க்கத்தைவெளியிட்டனர். யான்அவ் வாறே செய்விக்க

தரு

காந்தவரிருவரால் கணயேகாதசிவிரதங்
கைகொண்டேபணிந்தேன் பதம்          கேளுங்

வசனம்.

காவலர் காந்தவரிருவனைப்பிடித்துக்கொண்டுவர அவர்களுக் குநேர்ந்த ஆபத்தை நீக்கினமையால் அவர்கள் ஏகாதசிவிரதத்தை அநுஷ்டிக்கும்படிதெரிவித்துச்சென்றனர். அவ்வாறே அவ்விரதத் தை யானும் யென்னகரவாசிகளும் மற்றுமுள்ள சிற்றரசர்களும் அநுஷ்டித்துக்கொண்டுவருகின்றோம்.

தரு

அடியவனாட்டிலுள் ளதிசயமிதுவே
அறிவீரெவர்க்கும் பொதுவே          கேளுங்

வசனம்

அடியேனுடைய நாட்டிலுள்ள அதிசயமிதுதான் மஹாராஜ்



நாரதர் வசனம்.

ராஜன் சபாஷ் மஹத்தான சந்தோஷமடைந்தேன் அப்பேர் பட்டவிரதத்தை விடாமல் அநுஷ்டிக்கவேண்டியது. அதனால் பக வானுடைய சாயுஜ்ஜியத்தையடைய ஆக்ஷேபனையில்லை. இப்பொ ழுது யான் செல்லுகின்றேன்.

அரசன் வசனம்.

வந்தனஞ்செய்கின்றேன் மஹாராஜ்

நாரதர் வசனம்.

கல்யாண்.

நாரதர் எமனிடம்போகுதல்.

தரு

மாதவனே.

எமன் விருத்தம்.

உலகினிலுள்ளமாந்த குற்றதோர்புண்யஞ்செய்து
நலந்தரும்வைகுந்தத்தை நாடியேபோவதன்றி
இலகம்போல்விளங்குமென்றன் ஏர்பதிவெவரும்வாரா
நிலையதையறிந்துச்சொல்வீர் நிகரிலாமுனிவரேறே.

வசனம்.

பூலோகத்திலிவ்வசிக்கும்மனிதர்களெல்லாம்புண்ணியங்களை ச்செய்து வைகுந்தத்தையடைகின்றார்களேதவிர எனதுகாலதூதர் களுக்கும் எனக்குமயாதொருதொழிலுமில்லாமல் நரகங்களும் பா ழாய்விட்டது இது என்னகாரணமோ அடியேனுக்குத்தெரியவரா து என்பேரில் கிருபைகூர்ந்து அக்காரணத்தை தெரிவிக்கவேண் டும் பிரபு.

நாரதர் வசனம்.

எமதர்மா நீ சொல்லியது வாஸ்தவந்தான் மண்ணுலகில் விதி சாபுரத்தையாளும் ருக்மாங்கதன் ஏகாதசிவிரதத்தை யநுஷ்டித்து வருகின்றான். அவ்வாறேஅவனுக்குக்கப்பங்கட்டுஞ்சிற்றரசர்களும

அங்கேசவாசிகளும் அவ்விரதத்தை யனுஷ்டித்துவருகின்றார்கள் அ கையால் அப்பேர்ப்பட்டவர்கள்வைகுண்டத்திற்கேகிறார்களேயொ ழிய இந்தவைவஸ்வதபட்டணத்திற்கு வருகிறதில்லை. இதுதான் காரணம்.

எமன் வசனம்.

சுவாமின் அதற்கென்ன உபாயஞ்செய்யவேண்டியதோ அதை அடியேனுக்கு வெளியிடவேண்டும்.

நாரதர்வசனம்.

எமதர்மாவென்னசெய்கின்றது. அவன் பூண்டிருக்குமேகாதசி விரதத்தை பங்கஞ்செய்யவேண்டியது அப்படி செய்யும்பக்ஷத்தில் உன்கோரிக்கை நிறைவேறும் அதைப்பற்றி நீ கைலாயத்திற்கேகி சாக்ஷாத் பரமசிவனிடத்தில் முறையிட்டுக்கொண்டால் காரியம் அனுகூலமாகும்,

எமன் வசனம்.

பிரபு ஆனால் அவ்வாறே செய்கின்றேன், வந்தனஞ்செய்கின் றேன். (நாரதர் கல்யாண்)

எமன்ஈஸ்வரனிடம் முறையிடல்.

வசனம்.

சர்வ அண்டங்களையும் தனது குக்ஷியில் வைத்து ரக்ஷிக்கும் பரம்பொருளை எமதர்மன் நமஸ்கரிக்கின்றேன்.

ஈஸ்வரன் வசனம்.

கல்யாண். எமதர்மா உனது முகம்வாடி யிவ்வளவுதீவிரமாய் யிங்கு வந்தகாரணம் யாது சொல்லுவாய்.

எமன் வசனம்

வஜொதிசா பூலோகத்தில் ருக்மாங்கதன் யென்னும் அரசன் ஏகாதசிவிரதத்தையனுஷ்டித்துவருகின்றான் அன்றியும் அவ்வூரிலு ள்ள பிரஜைகள்யாவரும் அவ்வாசனுக்கு கப்பங்கட்டுஞ் சிற்றரசர் களும்அன்னகரவாசிகளும்அவ்விரதத்தையநுஷ்டிக்கிறார்கள் ஆகை யால் யெல்லோரும் வைகுண்டத்துக்கேகிறார்களேயொழிய யென் னுடையபட்டணத்திற்குவருகிறதில்லை. எனதுலோகம்பாழாகிவிட்



டது எனக்கும் என்னூதர்களுக்கும் ஒருகாரியமுமில்லை இச்செய்தி யை தங்களிடம் அறிக்கைசெய்யவந்தேன் இதற்கு ஏதாகிலுமுபா யஞ்செய்து என்கோரிக்கையை நிறைவேற்றவேண்டும்.

ஈஸ்வரன் வசனம்.

எமதர்மா நீ சொல்லிவந்தவிடயத்தைப்பற்றி யோசிக்குமிட த்து உன்கோரிக்கை பிரம்மாவினால் நிறைவேறவேண் டியதாகயிருக்கிறது.

பிரமன்வசனம்.

சபாஷ் நன்றாயிருக்கிறது. ஆயினும், சிந்தையில்லை. நான் ஒன் றுயோசிக்கின்றேன். அதாவது மஹா ரூபலாவண்யமாக ஓர்கன்னி கையை சிருஷ்டித்து அக்கன்னிகையால் அந்தவிரதத்தை பங்கஞ் செய்விக்கவேண்டியது. அப்படிக்குச் செய்வது உசிதமா.

ஈஸ்வரன்வசனம்.

அப்படிக்குச்செய்யவேண்டுமென்றுயோசித்துதானஉம்மைச் சுட்டிக்காட்டினது மறுபடியும் யென்னைக்கேட்பானேன் எமதர் மா நீ உன்னிருப்பிடஞ் செல்வாய்.

---

பிரமன் ஓர்கன்னிகையை சிருஷ்டித்து அவளுக்குஜெகன்மோ கினியென்றுநாமதேயமிட அக்கன்னிகை பிரம்மனைகேட்கும்.

வசனம்

சுவாமி என்னை சிருஷ்டித்தக்காரணம் யாதோ அதைக்கட்டளை யிட்டால் அவ்வாறே செய்யத்தடையில்லை.

பிரமன்வசனம்.

சர்வலோகமோகனாங்கி நீ பூமியிற் பிரவேசித்து மங்காகிரிச் சாரலிற் போய் அங்கு யான் சிருஷ்டிக்கும் ஒரு திவ்விய சந்தனச் சோலை மத்தியில் வீற்றிருந்து வீணாகானஞ்செய்துக்கொண்டிரு அதைக்கேட்டு வேட்டையாடவரும் ருக்மாங்கதமகாராஜன் சோலை

க்குள்பிரவேசித்து உன்னைக்காண்பான் அவனையெவ்விதத்திலாவது உன் தாமக்கடலில் மூழ்கச்செய்து அவன் உன்னை ஆலிங்கனஞ்செய்யவரும்போது. அவனிடத்தில் அக்னிசாக்ஷியாக ஒரு வரம்வேண்டுமென்று வாங்கிக்கொண்டு பின்னவனோடுகூடி கிரீடித்துச்சில நாள் சென்றபின் ஏகாதசியில் உன்னைக் கிரீடிக்கவேண்டுமென்று அவனை பலாத்காரஞ்செய்து கூடி அவன் விரதத்தை அழித்துவிடு அவன் அதற்கு உடன்படாவிட்டால் முன்கேட்ட வரத்தின்படி அவன்புத்திரனாகிய தர்மாங்கதனுடைய தலையையாவது கொய்துத் தாச்சொல்லி வாங்கிக்கொள். இதுதான் நீ செய்யவேண்டிய காரியம் செல்வாய்.

மோகனாங்கி அவ்வாறே அச்சோலையில் பிரவேசித்து வீணாகானஞ்செய்துக்கொண்டு வீற்றிருத்தல்.

விதிசாபுரத்தின் குடிகள் தாங்களிட்ட பயிர்களை
மிருகங்களழிக்கக்கண்டு புலம்புந் தரு.

இ-ம். ஏக்டா - ஏகதாளம்.

சிந்தைமெலிய வந்ததடா நமது
சேத்தியம்யாவுமேபாழானதடா
செய்வதென்னசொல்லடா.

கந்தசாமிடா கவுண்டன்மூத்தடா
கொண்டல்நாயுடா அடா
கணமதனுஞ்மெலியவுங்காலம்வந்ததே
கல்லெடுப்புமீதடா.

பாலகிஷ்ணவோய் பத்துமாதமாய்
சாலவுழைத்ததடா கடா சொலும்
வேலைசூழலகில் வெருளியானதே
விந்தைநேர்ந்ததே அடா.

குப்புசெட்டியே அப்புரெட்டியே
கோவிடஞ்செல்வோமடா
இப்புவியில் சுப்பராயமுதலியே
என்னசெய்குவோமடா.



குடிகள் அரசனிடம்முறையிட அரசன் அவர்களுக்கு வேண்டிய தேறுதல்சொல்லி வேடுவர்களை வரவழைத்து வேட்டை சன்னத்தனாக காட்டிற்குச்சென்று வேட்டையாடுந்

தரு. இ-ம் வசந்தா - தா - சின்ன ஆதி.

வேட்டையாடுவோமினி வருவீர்
வேடுவரே வனமேவி மிருகம் பதர கதர சிதர
மடியவதைத்திடவே நாம் வேட்டை

நாட்டையதம்புரியுங் காட்டுபன்றிகளை
நாடாமலோட்டியடா பெருஞ்சென்
னாயகனுமிதோயதி கூட்டமாகவே வருகுததனை
பகழியதனாலுயிரை பரிக்க வேட்டை

கும்பலாய் பெரும்புலி காணுததோபார்
கொல்லிரவைகளையே விடாமல்
கோரமதாரியை வாரிதனையிலனையும் வலுமை
பெருத்த அரியின் சிரத்தைத்தரிக்க வேட்டை

வசனம்.

அடா வேடுவர்களே நம்மெதிரில் தோன்றிய மிருகங்கள் யாவும் அதமாய்விட்டன. நீங்கள் என்னசெய்யவேண்டுமெனில், புதருகளில் ஒளித்திருக்கும் மிருகங்களை விரட்டிக் கொல்லுவீர்கள். யான் இளைப்பாரும்பொருட்டு நந்தவனமடைந்து தாகமருந்தி வருகிறேன்.

வேடர் வசனம்.

அப்படியேசெய்கிறோம் மகாராஜனே.

அரசன் புதிதாய்க்காணும் நந்தவனத்தைப்பார்த்து வருணித்தல்.

தண்டகம்.

ஆ ஹா என்னென்றுசொல்லுவேன் இந்த
அருமைசேர்வனத்தின் பெருமையையின்றுநான் ஆஹா

அசோகு புன்னை அத்தி அரசு
ஆத்தியுடன்பெரும் ஆச்சாவிருக்ஷம்
இத்தியிலந்தை எலுமிச்சையுடன்
இன்புறு இலவம் இலுப்பையெட்டி
கமுகுவாழையும் காயாகுங்கமம்

கன்னிகுருந்து கருக்குவாளி
சிவந்தியுடன் சிறந்த தெங்கு
செப்பருநாவல் தேக்குநுவிலி
மாதளைவன்னி மாமுருங்கை
மணமிகுவில்வம் மலைமல்லிகையும்
வெட்பாலையுடன் விளாவேம்புவேல்
வேங்கைபூவரசு விளங்குஞ்சந்தனம்
அமோகவிருட்சம் அடர்ந்திருப்பதை ஆஹா

ஆஹா யிதென்ன ஆச்சரியம் இவ்வளவு அழகோடுங் கூடிய ஓர் நந்தவனத்தை நாம் யிதுவரையிலும் கண்டதில்லை. தேவர்கள் பூலோகத்திற்குவந்தால் அவர்கள் உலாவும்பொருட்டு பிரமதேவன் யிந்த நந்தவனத்தை சிருஷ்டித்தனரோ அல்லது ருக்மாங்கதன் வேட்டமாடவந்தால் யிளைப்பாரும்பொருட்டு ஒரு பூஞ்சோலை வேண்டுமென்று அமைத்தனரோ. அப்படியிருந்தால் யான்செய்த பாக்கியமே பாக்கியம்.

என்று பலவாறுவர்ணித்து நாகமருந்தச்செல்லுதல்.

மோகினி அரசன்வரவைக்கண்டு பாடுந் தரு.

துருபத்.

அண்டர்துயரை யகற்றியே
ஆழியிலமர்ந்தோயெனை
ஆதரிப்பதுனையல்லால் யன்றிவேருண்டோ
புவியில் ஆதி நீயேகதி அண்டர்

எண்டிசைப்புகழும் ருக்மாங்கதனை
ஏகநாயகனே யென்றன் பாகமாகச்செய்
வதுன்றன் பாரம் பாரமே அண்டர்

பூதகிபாலுண்டு ஆயர்ப்பாடியினில்
பொருந்தியதேவாயுன்றன் பொன்னடி
பணிந்தேன் சுகபோதா மலர்பாதா அண்டர்

அரசன் மோகினியைக்கண்டு வர்ணித்தல்.

இ-ம் சாவேரி தா - ஆதி

இவளாரோ அறிகிலேனே நானே
இவ்வனப்பு வாய்ந்தமடமானே இவளாரோ



தவமுனிவருக்குகந்த பெண்ணோ
தகைசேருந் தேவருக்கிருகண்ணோ
பயமில்லாவனந்தனிலொளிருமாதைக்கண்டு
பதைக்கிறேனே யிந்தபேதை இவளாரோ.

அங்கஜன் மகிழ்வுகொளும் ரதியோ
அயன்னாவிலமர் சரஸ் வதியோ
இங்கேதோகுறைபிறவிப் போது - நல்ல
இசையாய்ப்பாடுகிறாளிம் மாது இவளாரோ

எந்தன்மையல்தீர்க்கவே வருவாளோ
எனைக்கட்டிமுத்தந் தருவாளோ
இந்தவேளை மதன்சரத்தி னாலே - உடல்
யெரியசெய்கிறான் புவி மேலே இவளாரோ

அரசன் அம்மாதைக்கண்டு மோகிக்குந் தரு.

இ-ம் இந்துஸ்தானி தோடி தா - ஆதி.

மானே கனிதத்தென்செய்வேன்
மாரன்கணையில்வேகுவேன் ஏங்குவேன் மானே

தேனேமரகதமே தேடக்கிட்டா அங்கமே
சித்தம்வைத்தெனையணைவாய் செப்பருந்தங்கமே மானே

சீதமதிமுகத்து சேயிழையுனைக்கண்டு
சித்தமயங்குதே செய்குவேனுனக்குத்தொண்டு மானே

ஆர்செய்த தவமோநீ அடைந்தாயின்னந்தவனம்
அன்னமேமனதிரங்கி ஆதரித்தால் கனம் மானே

மோகினி அரசனைக்கேட்கும் விருத்தம்.

இங்களைமாற்றவல்ல சிறந்ததோர் வடிவமைந்த
துங்கநல்மணியேநீவார் துலங்குமுன்பேர்தானென்ன
மங்கையைநாடியிங்கு வந்ததோர்காரணத்தை
சங்கையில்லாமலென்முன் சதிருடனுரைசெய்வீரே.

வசனம்.

சந்திரனைப்பழிக்கத்தக்க சிறந்தஅழகுவாய்ந்த ஐயா தாம் யார்

தமது நாமதேயமென்ன யிப்பேதையை நாடி யிங்கு வந்தகாரணம் யாது இவைகளை எனக்கு உரைசெய்வீர்

அரசன் விருத்தம்.

உரைசெய்வீரென்றுகேட்ட வொண்டொடி விதிசாபுரத்தை
நிரையுடனாள்வோனென்பேர் நிகரில்ருக்மாங்கதன்யான்
வரைகளில்வேட்டமாட வந்தனன்மானேயிந்த
கரைதனிலுன்னைக்கண்டு கலங்குரேனிருவாயே.

வசனம்.

மாதே விதிசாபுரத்தை வெகுநீதியுடன் பரிபாலனஞ்செய்பவனுக்கும் யான். என்பெயர் ருக்மாங்கதமஹாராஜன். நான் எனது குடிகள் முறைக்கிரங்கி வேட்டமாடவந்தேன் யிங்கு உன்னைக்கண்டு காமாந்தகாரத்தில்மூழ்கி மனங்கலங்கியிருக்கின்றேன். இதுதான் என் சவிஸ்தாரம்.

மோகினிக்கும் அரசனுக்குந் தற்கம்.

மோகினி தரு.

இ-ம் கமாஸ் தா - ஆதி.

மன்னா ஏனோ மனம்வாடி மங்கையின்மீதினில்
மாமைய லாகாதினி மன்னா
கன்னயமாய் நாடாளுமரசர்
நாணமில்லாமல்மரு நங்கையைக்கோரப்போமோ மன்னா

அரசன் தரு.

இ-ம் இந்துஸ்தானி காபி தா - திஸ்ரம்

நங்கையேமனமிரங்கி யருகில் நாவோயடி நங்கை
அங்கஜன்கணையினாலென் னுவிசோருதே
அஞ்ஞனமே உன்றனைக்கூட [illegible] நங்கை

மோகினி தரு

ஆசை மீறி அலைகிறீர் ஆகாதிந்தமோகம்
ஆடவள் மீதிலதி ஆசை
வேசை போல வெண்ணிமேல்விழவாரீர்
வேந்தருக்கிது அழகாகாது போம் போம் பெரும் ஆசை



அரசன் தரு

ம்போமென்றென்னை பேசுவதும் பெண்ணேயாகாது
புசெய்துகாலம்போக்க விருப்பங்கொள்ளாதே
ணவர்மணி யிவ்வேளை வெறுத்துத்தள்ளாதே போம்

மோகினி விருத்தம்.

பங்கயன்புத்ரியானும் பகரும்பூலோகத்தில்
பொங்கமாயேகாதசியின் புகழ்தரும் விரதந்தன்னை
துங்கமாயனுஷ்டித்தோதுந் துயரின்றிவாழ்வோன்றன்னை
இங்ஙனேகூடிச்சேர வெண்ணியேவந்தேன் காண்பீர்.

வசனம்.

நான் சதுர்முகனுடையபுத்திரி யென்பேர்மோகனாங்கி சர்வேஸ்வராகிய பரந்தாமருடைய திருவடிகளையே தஞ்சமென்று பற்றி காதசிவிரதத்தை யனுஷ்டிக்கின்ற சத்தியஸம்பன்ன னெவனோ ந்த புருஷ சிரேஷ்டனையே எனக்கு பத்தவாகப் பெறவேண்டுமென்று நிர்மானுஷ்யமான ஆரண்யத்தி லிரானின்ற யிந்தச் சந்தனச்சோலையில்நெடுநேரமாக அரியதபசெய்துக்கொண்டிருக்கிறேன்.

அரசன் விருத்தம்,

சதுர்முகன்மகளாய்வந்த தையலேகேளாய்நல்ல
மதிதருமேகாதசியின் கனம்பெறுவிரதந்தன்னை
புதுமையாயனுஷ்டித்தேயிப் பூலோகந்தன்னில்கீர்த்தி
அதிகமாய்கொண்டேனின்னும் ஐயமேதுரைசெய்வாயே.

வசனம்.

நான்முகன்புத்திரியாயவதரித்ததையலே! ஏகாதசிவிரதத்தை யனுஷ்டித்து மண்ணுலகில்கீர்த்தியையடைந்த மன்னவன்யான்தான் யிது நிச்சயம். என்னைக்கூடி யணைய யின்னம் யென்னதடை.

மோகினி வசனம்.

அப்படியிருந்தால் நான்செய்தபாக்கியமே பாக்கியம் ஆ.

மோகினிக்கும் அரசனுக்குந் தர்க்கம்.

தரு

இ-ம் இந்துஸ்தானி பியாக் தா - ஆதி.

சொல்லுவேன் கேளுமன்னவா
சுந்தரனே உந்தன் சிந்தைமகிழவேயிங்கு சொல்

தொல்லுலகிலெனக்கு துணையாம்புருடனும்மை
யல்லால்வேறுண்டோ வல்லவாயென்கருத்தை சொல்

அரசன் தரு.

கருத்தென்னசொல்வாய்க்கண்ணே உந்தன் கருத்
காமக்கிளியேமானே கற்கண்டே தேனேவுன் கருத்

திருமால்நாமந்தனை தினமுந்துதித்திடுகல்
லுருவேயெதைக்கேட்டால் தருவேன்மயிலேவுன் கருத்

மோகினி தரு

தருவேனென்றுசொன்ன தரணிபுகழரசே
மருவில்லாதவொரு வரமெனக்கருள சொல்

அரசன் தரு.

வரமென்னடியின்னே வாகாயெனக்கதைநீ
உரைசெய்தாலிந்தத் தரையிலளிப்பேனுன் கருத்

மோகினி விருத்தம்.

அளிப்பேனென்றெனக்குரைத்த யதிருபவரசரேநான்
களிப்புடன்கோரும்வேளைக் கன்னியின்மனதைப்போல
தெளிப்புடஞ்சேர்வேனென்று சிதரன்மீதுசத்யம்
வொளிப்பின்றிச்செய்வீராகில் வும்மைநான்கூடுவேனே.

வசனம்.

எதைக்கேட்டபோதிலு"மளிப்பதற் கய்யமில்லையென்று சொல்லும் மஹாராஜனே என்னைவிட்டு பிரிகிறதில்லையெனவும் அப்ப்



டி பிரிந்தால் எனக்கென்னவாம்வேண்டுமோ அதை தடையின்றி கொடுப்பதாக ஸ்ரீஹரியின்மீது சத்தியஞ்செய்தால நான் தங்களைக் கூடுவதற்குத் தடையில்லை.

அரசன் சத்தியஞ்செய்து தால்.

அரசன் விருத்தம்.

சொன்னவாறதுபோல்செய்தேன் தோகையேயென்னைக்கூட
இன்னமேன்தாமதங்கொண் டிருக்கின்றாய்கிளியேமான்
சின்னபின்னங்களாகத் தொடுக்கிறான்கணையென்மீது
அன்னமேயருள்கூர்ந்து அணையவேவருகுவாயே.

வசனம்.

அடி என்கிளியே நீ கேட்டதைப்போல் யான் சத்தியஞ்செய்துகொடுத்தேன் என்னைகூடிசுகிக்க இன்னும்என்னதாமதம் ஐயோ மன்மதன் என்மீது அபரிமிதமாக கணைகளை தொடுக்கிறானே என்னால் பொறுக்க முடியவில்லையே என்மீது கிருபைகூர்ந்து என்னை சீக்கிரம் யணைவாயடி கண்ணே.

மோகினி கலியாணஞ்செய்துசுகிப்போமென்று அரசனுக்குத் தெரிவித்தல்.

தரு. இ-ம் கானடா தா - சதுர்சஜாதி திரிபுடை.

மன்னவா சொல்வதைக்கேளும் மன்

மணமாகாமுன்னம் மருவுதல் அழகல்லவே மன்

நன்னயமாகவே நாமிருவரும்
நாட்டிலுள்ளோர்காணவேயணைவோம் மன்

அரசன் வசனம்.

இருண்டமேகம்போலக் கறுத்துத் தெய்வமணம்வீசுகின்ற திவ்விய மயிர்ச்சாந்துபூசப்பட்டு நானாவித சுகந்தபுஷ்பங்களோடுமுடிக்கப்பட்ட அளகபாரம் அவிழ்க்க முடிகிறப்புளவும் கைகளிலணிக்கப்பட்ட நவரத்தின கசிதமாகிய பொன்வளையல்கள் சுழலவும் மேலே த

ரித்த பீதாம்பரமாகிய உத்தரீயஞ் சோர்ந்து விலகவும் முகமாகிய சந்திரனிடத்தில் அமிர்தபானஞ்செய்யச் செல்லுகின்ற சேவலும் பேடையுமாகிய இரண்டு சகோரபட்சிகளைப்போல மார்பினிடத்தில் இரண்டு குஜங்கள்விளங்கவும், காமக்குறிப்புத்தோன்றும்படி மந்தகாசஞ்செய்து மிகுந்த லச்சையோடு தலையைவளைத்துக் கடைகண்ணால்பார்க்கும் என் சாரசக்கிளியே அரசர்க்குரியது காந்தர்வ விவாகம் அப்படியே காந்தர்வமாய்க்கூடலாம் வருவாய்.

இருவரும் கூடி நகரமடைதல்.

தர்மாங்கதனுக்கு பட்டங் கட்டுதல்.

தர்மாங்கதன் ஏகாதசிவிரதத்தை யனுஷ்டிக்கவேண்டுமென பறைசாற்றும்படி தோட்டிக்கு உத்தரவளிக்கும்

தர்மாங்கதன் விருத்தம்.

விண்ணவர்மகிழுமிந்த விதிசபாபுரத்திலுள்ள
எண்வயதிற்குமேலா யிருக்குமாண்பெண்முதலானோர்
திண்ணமாம்யேகாதசியின் நிகழ்தரும்விரதந்தன்னை
தன்மையோடனுஷ்டிக்கயித் ததிபறைசாற்றுவாயே.

வசனம்

அடாதோட்டி நீ யென்ன பறையறிவிக்கவேண்டுமெனில் யிந்த விதிசாபுரத்திலுள்ள ஆண் பெண் முதலிய யாவரும் யேகாதசிவிரதத்தை யனுஷ்டிக்கவேண்டியதென பறைசாற்றவேண்டும்.

தோட்டி பறைசாற்றுதல்.

இயால்.

விதிசாபுரத்திலுள்ளபேரே விளம்புவேன்கேளீர்
விரைவாயரசனறிக்கையிட்டதை பரிவுடன்சொல்வேன் விதி

அரியயேகாதசியின் விரதமனுஷ்டிக்கனை
அறிவீர்தசமிவுரைசெய்தேனிதை அகத்திற்கொள்ளுவீர் விதி

இரண்டானேகாதசியிதை யெண்ணிடவுங்கள்
யிசைப்பேன்மூன்றாள் துவாதசி யினிதாய்காணுவீர் விதி



வேந்தனுக்கினைமீறினால் வேதைவருஞ்சொன்னேன்
விதிமுறையிசகாமலாண்பெண் விரதமிருக்கவே விதி

அரசன் தண்டோராசத்தங்கேட்டு சேவகனைவிசாரிக்கச்சொல்லுதல்.

வசனம்.

அடா சேவகா என்னடா தண்டோராசத்தங் கேட்கின்றது அதை விசாரித்துவருவாய்.

சேவகன் வசனம்.

அடா தோட்டி என்னசமாசாரம் ஏன் பறைசாற்றுகின்றாய்.

தோட்டி வசனம்.

ஐயா ஏகாதசிவிரத மனுஷ்டிக்கவேண்டுமென்று பறைசாற்றுகின்றேன். நாளையதினம் தசமி.

சேவகன் வசனம்.

மஹாராஜனே ஏகாதசிவிரதமனுஷ்டிக்கவேண்டு மென்று பறைசாற்றுகின்றான் நாளையதினம் தசமியாம் நாளைமுதல்மூன்றுதினங்கள் வழக்கப்படி விரதமிருக்கவேண்டுமோம்.

அரசன் வசனம்.

சேவகா அப்படியா. நல்லது நீ உன்னிருப்பிடஞ்செல்வாய்.

அரசன் விருத்தம்.

மாதர்கட்காசேனானை மகிமைசேர்தசமியென்றும்
ஓதுருமிரண்டாநாளில் வுயரேகாதசியாமென்றும்
யேதமில்லாபுத்திரந்தான் யெவர்களுமறியபறையிப்
போதுமேயறையச்செய்தான் போகவேவிடையிலாயே.

வசனம்.

ஏ பெண்கள் நாயகமே! நாளையதினம் தசமி, இரண்டாநாள் ஏகாதசி மூன்றுநாள் துவாதசியென்றும் சகலரும் அவ்விரதத்தை

யநுஷ்டிக்கவேண்டுமென்றும், எனது புதல்வன் தண்டோரா போடுவித்தானுக்கும் ஆகையால் நான்சென்று அவ்விரதத்தை யநுஷ்டிக்கவேண்டும் எனக்கு விடையீவாய்.

மோகினி விருத்தம்.

விடையீவாயென்றுகேட்ட வெற்றிசேர்மன்னாவென்ன
கொடுமையாய்ச்சொல்லலுற்றீர் கோரியேவந்தமாதைத்
திடமுடனிங்குவிட்டு திண்புயாமூன்றுநாளுந்
தடைபட்டுயிருக்கவோயித் தையலைக்கொணர்ந்தீரையா.

வசனம்.

கொஞ்சமேனும் யோசியாமல் விடையீவாயென்று கேட்ட என்னாசை நாயகமே என்னகர்ணகடோரமான வார்த்தையைத்தெரிவித்தீர் என்னையிங்குத் தனியாய்த்தயங்கவிட்டு நீர் மூன்றுநாள்வேறு பட்டிருப்பதற்காகவா யென்னை யிவ்விடமழைத்துக்கொண்டு வந்திர்கள் தாம் சொல்லுவதடாதகாரியமாக்கும் நான் ஒருநிமைப்போதும் தம்மைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன்.

அரசன் தரு.

இ-ம். செஞ்சுருடி தா - ஆதி.

தேனே யிந்தவாது செய்யல்
தெளிவல்லவே தேடருமானே தேனே

வானுலகோர்போற்றுதற்கரிய மாயனைத்தினம்
வாகாய்ப்பணி பூங்கிளியே வாடவேமனம் வஞ்சியிங்கனம் தேனே

மோகினி தரு.

இ-ம் கல்யாணி தா - ஆதி.

பூங்கிளியென்றேதுமன்னா
புகலுவதைக்கேளுஞ் சம்பன்னா பூங்கிளி

எங்கிடயென்னை யிங்குநீர்விட்டு
யேகுவதழகோ யேந்தலேமதிகெட்டு பூங்கிளி



அரசன்சொல் தரு.

மதிகெட்டேகிறேனென்றுவுன்றன் மனதிலெண்ணியே
மாதரசேவேதையாகி மயங்கியேயின்னேவாடுவதென்னே தேனே

மோகினி தரு.

மின்னேபொன்னேயென் றென்னைமறுத்து
மோகனாங்காநீரும் யோகனேன்வெறுத்து பூங்கிளி

அரசன் தரு.

போகலாகாதென்றுயெனைநீயும் பிடிவாதமாயிப்
போதனேகம்போதித்துமுன் புத்திமாறியெபூவைமீறியெ தேனே

மோகினி தரு.

பூவைநானுன்னை புகல்மூன்றுதினமும்
போகிக்காமல்விட்டுப் பிரிவேனோயின்னமும் பூங்கிளி

அரசன் தனியேபுலம்பல்.

தரு.

இ-ம். இந்துஸ்தானி பியர்க் - தா - திசிரம்.

ஐயோ வென்ன மோகம்வந்தெனக்
கடர்ந்ததே தேவா ஐயோ

வையபதினிலேகாதசி மாதவமொன்று
வண்மையாயனுஷ்டித்தேநான் வந்தேனேயின்று ஐயோ

பிடிவாதமாய் விட்டேனென்று பிதற்றியேபாவி
பேதமைத்தனத்தாலென்முன் பேசுராள்மேவி ஐயோ

அற்பசுகமேவிச்சைதனைவைத் தணைந்ததால் தானே
அவதிக்குள்ளாகினேனே அலைகிறேனானே ஐயோ

வசனம்.

ஏகாதசிவிரதத்தை யநுஷ்டிக்காமல் உல்லங்கனஞ்செய்கிறவர், பிராமணனை பசுவை சிசுவை ஸ்திரீயை கொலைபண்ணினவன்,

சத்துருவால் வருத்தப்பட்டு தன்னை அடைக்கலம் புகுந்தவனைக்கை சோரவிட்டவன், செய்நன்றிமறந்தவன், ஆலயங்களிலே புணர்ச்சி செய்தவன், தனக்குபோதித்த ஆசிரியனைவணங்க நாணுகின்றவன், யுத்தகளத்தில் தன்னரசனைக் கைவிட்டோடினவன், மகானுக்களைக் கண்டுதொழாதவன், தாய் தந்தையர்களைத் தூஷித்தவன், தேடிவந்த விருந்தையோட்டிவிட்டுத் தனியேசாப்பிடுகிறவன், பாதாரகமனஞ்செய்கின்றவன், தானஞ்செய்ததை யில்லையென்கிறவன் முதலானவர்கள் அடைகிற நரகத்தை பெறுவார்களென்பது புராணசித்தம். யிப்படியிருக்க அவ்விரதத்தை யனுஷ்டிக்கவொட்டாமல் தனது பேதமைதனத்தால்வாதாடுகிறுளே அற்பசுகத்திற் காசைப்பட்டமையாலல்லவோயிவ்வித அவஸ்தைப்படும்படி நேரிட்டது.

மோகினி விருத்தம்.

பன்னரும்வேட்டமாடப் பரிவுடன்வந்துகாவில்
என்னைநீர்கண்டுமோக மெய்தியேயெனக்கப்போது
சொன்னதோர்சத்யந்தன்னைத் துரிதமாய்மறந்தயென்றன்
மன்னவாமூன்றுநாளிம் மாதுநான்பிரியேன்கண்டீர்.

வசனம்.

ஆரண்யத்தில் வேட்டமாடவந்த தாம் யென்னைக்கண்டு மோகித்து யென்னைப் புணரவழைத்தபோது யென்னை விட்டுப்பிரிகிறதில்லையென்று சத்தியஞ் செய்துக்கொடுத்ததை மறந்து பேசலுற்றீர் யிந்த மூன்றுநாளும் தம்மைவிட்டு ஓர் நிமைப்போதும் பிரிந்திருக்கமாட்டேன்.

அரசனுக்கும் மொகினிக்குந் தர்க்கம்.

அரசன் தரு.

இ-ம். இந்துஸ்தானி காபி தா - ஆதி.

என்னையிந்தவேளை தனி லேந்திழையேதடுக்காதே என்னை

உன்னதயேகாதசியின் பன்னருமாவிரதத்தை
பின்னமுறாமல் னன்னயமாய்ப்புரிய என்னை



மோகினி தரு.

இ-ம் கவோஜ் - தா - ஆதி.

சுந்தராங்கனேயென்ன விந்தையாகசொல்லவந்தீர் சுந்த
இந்தவேளைமையல்தீர தந்தனைவிடேன்சாமி சுந்த

அரசன் தரு

[illegible]ந்தனைவிடேனென்றுநீ தொந்தரைசெய்யாதேகண்ணே
[illegible]ந்தரிவுன்றன் சிந்தைசொந்து வீறு என்னை

மோகினி தரு.

காரணம்நீதுனிசத்தியங் நீரமுடனேசெய்தீர்
மாரனைநாண்கோரும்வேளை தாரேனென்றுவாக்களித்த சுந்

அரசன் தரு.

வாக்களித்ததுவுமெய்யே நோக்கம்வையாமல்நீயதை
நீக்கிவேறுகேட்கின் ஊக்கமாய்த்தருவேன் என்னை

மோகினி தரு.

தருவேனென்றறைந்தயென் னருமைமன்னவரே
பெருமையாயிம்மூன்றுநாளும் பிரியாவரந்தாயதி சுந்

அரசன் புலம்பல்தரு.

மலார் கெஜல்.

என்னநான்செய்வேன் தெய்வமே யிதற்கென்ன

கன்னியிவளாலே காசினியின்மேலே
இன்னல்வாராமலே என்னையாள்திருமாலே என்ன

வஞ்சனையாய்மாது வாதிப்பதுந்தகாது
தஞ்சமென்றுமேது தான்விடாளிப்போது என்ன

பாவியிவள்சூதை பாராமலிப்பேதை
ஆவிவையுதேயிதை அகற்றுவாயிவ்வேதைக்கென்ன

மோகினி விருத்தம்.

பூதலத்திற் சிறப்புற்ற வரசர்தம்மில்
பொருமையுடனுலகாண்ட ஹரிச்சந்திரன்

போதமார் கௌசிகர்க்குச் சொன்ன சொல்லை
பிறழாமலிருக்கவன்றோ புவியிழந்தான்
ஏதமிலாதசரதனும் கைகேசிக்கன்
றீந்திட்டவரமதுபோலிராமன்றன்னைத்
தோதகமாய்சீதையுடன்காட்டிற்கேகச்
சொல்லியப்பின்னுயிர்விட்டான்சுகுணவேந்தே.

வசனம்.

பூர்வத்தில் விஸ்வாமித்திரருக்குச்சொல்லிய வாக்கை நிறைவேற்றுவதி னிமித்தமன்றோ ஹரிச்சந்திரமகாராஜனானவர் தம்முடைய நாடுநகரங்களை யிழந்து பெண்சாதி பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்து ஒருபுலையனுக்கும்அடிமைப்பட்டார். மேலும் தசரதசக்கரவர்த்தியானவர் தம்முடைய இளையபெண்சாதிக்குத் தாம் கொடுத்திருந்த வரத்தைப் பரிபாலனஞ்செய்யும் பொருட்டன்றோ ஸ்ரீராமமூர்த்தியை வஞ்சகமாய் ஜானகியுடன் காட்டிற்கனுப்பிவிட்டு தனது பிராணனையும் விட்டுவிட்டார் வேந்தே.

இதுவுமது விருத்தம்,

வேந்தனே மேற்சொன்ன வாசரெல்லாம்
விதிமுறைகள் தவராது தங்கள் வாக்கை
சாந்தமுடன் பாலித்துக் கீர்த்திதன்னை
சாதித்தார் வையகத்தி லெவரும் வாழ்த்தக்
காந்தனே மதிகுலத்திற் பிறந்தனந்தக்
கலைபலவு மறிந்தவரே யன்றெனக்கு
ஈந்திட்டவாக்கதுபோல் நடவாதென்றோ
யிதுவுமென்றன் விதியெனவேயெண்ணினேனே.

வசனம்.

பிராணநாதா நான் சொல்லிவந்த மன்னரெல்லாம் தங்கள் தங்கள் வாக்கை விதிவழிமாறாமல் பொருமையுடன் பரிபாலித்து பூலோகத்தின்கண் பெருமையை அடைந்திருக்க தாங்கள் சந்திரகுலத்தில் பிறந்து சகலகலைகளுங் கற்றுணர்ந்தவராயிருந்தும் அன்று நந்தவனத்தில் என்னைக்கண்டு மோகித்தபோது எனக்கு வரங்கொடுத்தீரே அதுபோல நடவாமல மாறிநடக்கின்றீரே இதுயென் விதிவசமோ அறிகிலேன்.



அரசன் விருத்தம்.

அருமலரோன் புத்திரியே வரையக்கேளா
யரியதோ ரேழுகடலும் பொங்கினாலும்
பெருமையுள்ள ரவிமதியும் வடக்கு தெற்காய்ப்
பெண்மயிலே வுதித்தாலு மன்னிணுலே
உருவமைந்த கற்பகவும் புவியின்மீது
வோயாமல் மடிப்பாலைக் காந்திட்டாலும்
திருமாலுக்குரிய பெரும் விரதந்தன்னைத்
திறமுடனே யநுஷ்டிப்பேன் தெரிவாய்கண்ணே,

வசனம்.

அடிபிராணசகி உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் யென்று சொல்லப்பட்ட இந்த யேழுகடலும் பொங்கினாலும் கிழக்கு மேற்காக உதிக்கும் சூரிய சந்திரான் தெற்கு வடக்காக உதித்தாலும் களிமண்ணாற்செய்த பசு ஓயாமற் பால்கறந்தாலும் ஸ்ரீவைகுந்த நாதனுக்குறிய யேகாதசி விரதத்தை,

இதுவுமது விருத்தம்.

அநுஷ்டிப்பதன்றியார் தடைசொன்னாலும்
அன்னமேகேட்டேனதற்காயென்றன்
தனக்குரியநாடுநகர்பொருள்களெல்லாந்
தாணிதனிலளிப்பதோடு மென்சிரத்தை
மனமகிழ்வாயீந்திடுவேன் மூன்றுநாளும்
மங்கையே எனைப்புணர்தல்நீக்கிவேறு
கனமிகுந்தவாந்தன்னைக் கேட்பாயாகில்
கண்மணியேகொடுத்திடுவேன் களிப்பாய்த்தானே.

வசனம்

அடி அன்னமே ஏகாதசிவிரதத்தை அநுஷ்டிப்பதை யார் தடைசெய்தபோதிலும் யான் கேட்கமாட்டேன் எனது நாடுநகரம் ரதகஜதுரகபதாதிகள் முதலியவைகளை கேட்டபோதிலும் சரி என் சிரத்தைவெட்டிதரும்படிகேட்டாலும் என்மனமகிழ்ந்தளிப்பேன். ஆகையால் இந்த மூன்றுநாளும் உன்னுடன் யிருக்கவென்று கேட்ட வார்த்தை நீக்கி வேறு எதைக்கேட்டபோதிலும் அகமகிழுடன் கொடுப்பேன்.

மோகினி கஜல்.

நான்முகாயெனையின் நாட்டிலேன்வீணையடைத்தாய்
நாயகரிவரென் நான்மகிழ்கொண்டுவந்தேன்
வான்மதிகுலத்துதித்தோர் வார்த்தைபிசகலாமோ
வாதைக்குள்ளாகியேநான் வாடவிதியமைத்தாயோ
நானிந்தகோலத்திற்கோ நாரணாபெண்ணாய்ப்பிறந்தேன்
நங்கையர்கள்கண்டுரச நாணுடம்பெடுக்கலானேன்
அரிஹரிகோவிந்தாயிவ் வரசனிடம்வாழ்வதைவிட
அரிவை என்னுயிரைநீக்கி ஆளுவதேயுந்தன்பாரம்.

அரசன் வசனம்.

பெண்ணே நீ ஏன் வீணாய் பிரலாபிக்கின்றாய் நான்முன்னமே உனக்கு தெரிவித்திருக்கின்றேன். அதாவது தசமி முதல் மூன்று தினமும் உன்னைவிட்டு நீங்கியிருப்பதற்கு நீ எதைக்கேட்டாலு மளிப்பேனென்று வாக்களித்திருக்கின்றேன். ஆகையால உன் மனோபீஷ்டம்யாது அதனைத்தெரிவிப்பாய்.

மோகினி விருத்தம்

தலைதனைக்கொடுப்பதாகத் தகாததோர்மொழியுரைத்த
நிலையிலாமன்னவுன்றன் நீள்சிரமெனக்குவேண்டேன்
கலைமதிமுகத்தோனான காளைதர்மாங்கதன்தன்
றலைதனைத்தருவீராகில் சம்மதம்கொள்வேன்நானே.

வசனம்.

தனது சிரத்தை அறுத்துக்கொடுப்பதாக மொழிந்த மன்னவரே சந்திரனை பழிக்கத்தக்க முகத்தினை வாய்ந்த தங்கள் புத்திரனாகிய தர்மாங்கதனுடைய சிரசை தருவீரேல் ஒப்புக்கொள்வேன்.

அரசன் வசனம்.

ஆனால் அப்படியேதருகின்றேன்.

அரசன் சந்தியாவளிக்கிசொல் வசனம்.

சகி உன்தங்கையை யான் காந்தர்வவிவாகஞ்செய்துக்கொண்டபோது அவளுக்கோர் வரமளிப்பதாக வாக்களித்தேன். இந்த ஏகாதசிவிரத அனுஷ்டிக்க மூன்றுநாளும் அவளைவிட்டுபிரிந்திருக்க



வேண்டுமென அதற்கவள் ஒவ்வாமல் முன்னங்கொடுத்த வரத்தை தரவேண்டுமென, யான் எனது சிரத்தை வெட்டித்தர கேட்டபோதிலு மளிப்பேன். விரதத்தை பங்கஞ்செய்யமாட்டேனெனச்செப்ப, அவள் நமது புதல்வனாகிய தர்மாங்கதன்சிரத்தை வெட்டித்தரவேண்டுமென்றுகேட்டாள். பிராணசகி உனது அபீஷ்டம் யாது

சந்தியாவளி விருத்தம்.

தேசமெங்கணுமேகீர்த்தி செலுத்திட்டவரசரேநாம்
பூசனைப்புரிந்துவந்த புகலொணாவிரதந்தன்னை
நேசமாய்நிலைநிறுத்த நின்மனமதுபோலியானும்
பாசமாய்ச்சம்மதித்தேன் பாலனுக்குனாசெய்வீரே.

வசனம்.

லோகத்தில் கீர்த்தியை நிலைநாட்டியமன்னவரே இதுவரையில் நாம்புரிந்துவந்த ஏகாதசிவிரதத்தை நிலைநிறுத்த உமக்கிச்சையிருக்கும்பக்ஷத்தில் தமது அபீஷ்டப்பிரகாரம் நிறைவேற்ற ஆக்ஷேபனையில்லை. இச்செய்தி நமது வத்சனுக்குத் தெரிவிப்பீர்.

அரசன் தர்மாங்கதனைக்கேட்கும் வசனம்.

வத்ஸா உன் சிற்றன்னையைவிட்டுப் பிரியாதிருக்கவும், பிரியுங்காலத்தில் தனக்கிச்சையான வரமொன்று கொடுப்பதாகவும் வாக்களித்து விட்டேன், இப்பொழுது ஏகாதசிவிரதத்தை யநுஷ்டிக்க வேண்டி யிந்த மூன்றுநாளும் அவளைவிட்டுப்பிரிந்திருக்க நேரிட்டதால், அவ்வரத்தைத் தரும்படி கேட்டாள், அதென்ன வரமென்று கேட்டதற்கு உனது சிரத்தைக் கொய்தளிக்கவேண்டுமென்கிறாள். உன் கருத்தென்ன வெளியிடுவாய் கண்மணியே.

தர்மாங்கதன் தரு

இ-ம். இந்துஸ்தானி தோடி. தா - சதுர்சஜாதி திரிபுடை.

எனதாருயிர்தாய் தந்தையரேகேளீர் — எனை

மனவேதனைவையாமலே
மைந்தனானாக்குமொழி — எனை

என்னதவஞ்செய்தேனோ யிப்பவனெனக்குவா
யேழைநானறியேன் யினிதாயெனைபெற்ற — எனை

தேகஞ்சதமல்ல தெளிவுடனீருஞ்
சேதித்தென்சிரமதை தேவியருக்கியும் என

என்றைறக்கிருந்தாலு மிறப்பதேமண்மீது
யெண்ணியென்தந்தையே யென்றலைகொய்வீர்

வசனம்.

என்னை அரியதவஞ்செய்து யீன்றெடுத்த தாய்தந்தையர்களே யிந்த அற்பவிஷயத்தைக் குறித்து விசனமுறாதீர்கள் யான் முற்பிறப்பில் என்னதவம் மியற்றினேனோ இப்படிப்பட்ட நற்கதி எனக்கு வாய்க்க, யிக்காயமோ அநித்தியமானது இறந்தால் யிவ்வுடலை நாய் நரி நமதென்று கௌவிக்கொள்ளுமாக்கும். ஸ்ரீமந்நாராயணதின விரதமானது பழுதுபடாதிருக்க நாயேனுடைய சிரத்தைக்கொய்து எனது சிற்றன்னையினுடைய மனங்களிக்கச் செய்வீர்கள்.

மோகினி சந்தியாவளிக்குச்சொல் வசனம்.

அக்கா நான் யென்னவென் றெடுத்துரைக்கப்போகிறேன் கேவலமாகிய ஏகாதசி விரதத்தை யநுஷ்டிக்கும்பொருட்டுத் தாம் அரியதவஞ்செய்து பத்துமாதஞ்சுமந்து ஈன்றெடுத்தக் குழந்தையின் சிரத்தை வீணாய் வெட்டிவிடப்போகிறார் தாங்களாகிலும் சொல்லி பிள்ளையை வெட்டாமலிருக்கும்படி செய்யவேண்டும்.

சந்தியாவளி வசனம்.

தங்கா என்னவார்த்தை யுரைக்கின்றாய் கேவலம் நீரின் மேற்குமிழியை யொத்த நிலையில்லாத யித்தேகத்தை யிப்புவியின்மீது வைத்திருக்க ஆசைகொண்டு மஹத்தானபலனை யளிக்கும்படியான ஏகாதசிவிரதத்தை பங்கஞ்செய்துக்கொள்ளவேண்டுமா ஒருகாலத்திலும் செய்யமாட்டோம் யெனது சிரத்தையுங்கூட கேட்டபோதிலும் தருவதற்கு ஐயமில்லை. நீ யேன் வீண்பிரயாசை யெடுத்துக்கொள்ளுகிறாய்.

மோகினி பாலனுக்குச்சொல் வசனம்.

வத்ஸா உன் தந்தையானவர் ஏகாதசிவிரதத்தினிமித்தம் உன் சிரத்தைக் கொய்யப்போகிறார். நான் யெவ்வளவோ சொல்லியுங் கேளாமல் ஒரே பிடிவாதமாக யிருக்கிறார். ஐயோ வீணாயிறக்கப்



போகிறாயே. அடா யென் கண்ணே உன்பிதா சொல்லியதற்கு நீ [illegible]ங்காமலிருந்தால் நான் யெப்படியாகிலும் மறுபடியும் அவருக்கு வேண்டிய உபாயங்களைச்செப்பி உன்னைக் காப்பாற்றுகின்.

தர்மாங்கதன மோகினிக்குச்சொல் வசனம்.

மாதோஸ்த்ரீ சாக்ஷாத் பரந்தாமனுடைய அருளைப்பெரும் பொருட்டாய் ஏகாதசி விரதத்தை அநுஷ்டித்து வருகிறோம் அவ் விரதத்தைத் தாங்கள் பங்கஞ் செய்யவேண்டாம் இதற்காக அடியேனுடைய சிரத்தைக் கொய்தாலும் இன்னும் யென்னை யென்ன செய்தபோதிலும் விரதத்தை அநுஷ்டிக்காமல் யிருக்கமாட்டோம் தாம் தடைசெய்யாதீர் தாயே.

அரசன் பிள்ளையினுடைய தலையைவெட்டுவதற்குமுன் மூவரும் அரிஸ்தோத்திரம் பண்ணல்.

தரு. இ-ம். குல்ரோஜ் தா - சாபு.

திருமகள்நேசா தேவர்யெம்மையாள்
தருணமென்று — [illegible]தாள் திரு

கருணைகரனே கனிந்தித்ததீ
வரவேணுமிங்கு வானோர்பதி திரு

அரக்கரைவென்ற ஹரிகோவிந்தா
பரகதிதந்தருள் வைகுந்தா திரு

பஞ்சவர்நேயா பரமவேதா
அஞ்சலென்றுன் னரும்பாதம்தா திரு

அரசன் மஹாவிஷ்ணுவை தியானித்து தர்மாங்கதனுடைய சிரம் வெட்டுதல்.

மஹாவிஷ்ணு பிரசன்னமாகுதல்.

விருத்தம்.

அன்பனேபதாவேண்டா மவனியிலுன்னைப்போன்ற
அன்பனைக்கண்டதில்லை அரிதினவிரதங்களை
அன்பனே அனுஷ்டித்தோனீ யாதலாலுங்கருந்தொண்
டன்பனே பதவித்தோ மண்டர்களரியத்தானே.

வசனம்.

ஆ பக்தா ருக்மாங்கதா ஆத்திரப்படாதே நீ எம்முடைய மாயிய ஏகாதசியை அநுஷ்டிக்கும் விரதத்தை மிகவும்மெச்சினே பூலோகத்திலே என்னிடத்தில் பக்தியுள்ளவர்கள் உன்னை வேறேயுண்டோ முத்திசாதகமாகிய இந்த விரதத்தை தா புத்ராதிகள் அநுஷ்டிக்கும்படி செய்ததுமல்லாமல் சகலதேசங்களிலும் வியாபிக்கச்செய்த பரமபாகவதசிகாமணியே இதோ மாணிக்க விமானம்வருகின்றது அதில் நீயும் சந்தியாவளியும் தர்மாங்கதனும் ஆரோகணித்துக்கொண்டுபரமபதத்திற்குவாருங்கள் அன்பர்களே.

மங்களம்.

இ-ம். இந்துஸ்தானி காபி தா - ரூபகம்.

மன்னனாந்தமாதவா ஜெயமங்களம்
வெண்ணெயுண்டருள் கண்ணனே கொண்டல்
வண்ணனேதிரு மேவும் மார்பா சுபமங்களம்

எங்குநிறைந்த ஈசனே ஜெயமங்களம்
தங்கிரண்யனைக்கம்பிளந்த
சிங்கனேமிகு தாயா நேயா சுபமங்களம்

பக்தர்க்கிரங்கும்பாதனே ஜெயமங்களம்
அத்தனே பரிசுத்தனே வெற்றிலத்தினையுமணம்
ஆண்டதேவா சுபமங்களம்

வாரணந்தொழுங் காரணா ஜெயமங்களம்
நாராயணசாமிதொழு நீதனே புவி
நாடு மூவா சுபமங்களம்

முற்றிற்று.